223

44453

முடிமன்னர் மூவர்

223/2

மு. சண்முகம் பிள்ளை

27 APR 1951
MADRAS

...ஷிங் கம்பெனி, சென்னை-1

V21
N51

முடிமன்னர் மூவர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 951
MADRAS

புரவசேரி
மு. ஷண்முகம் பிள்ளை, B.A. (Hons.)
இயற்றியது

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டி தெரு, சென்னை—1

பதிப்புரிமை] 1951 [விலை அணா 14

முதற் பதிப்பு—நவம்பர் 1949
இரண்டாம் பதிப்பு—ஜூலை 1950
மூன்றாம் பதிப்பு—மார்ச் 1951

Approved by the Text-Book Committee, Madras for class use—Non-detailed Study—vide page 116 of Part II of Supplement to Part I-B of Fort St. George Gazette dated 23rd May 1950,

also

Approved by the Text-Book Committee, United States of Travancore and Cochin.

Kabeer Printing Works, Madras-5

முன்னுரை

முடிமன்னர் மூவர் என்னும் இந்நூலில், தமிழ் நாட்டு வேந்தர்கள் சேர, சோழ பாண்டியருள் தலை சிறந்த மூன்று அரசர்களைப் பற்றிக் கூறியுள்ளேன். முதற்கண் கூறப்படும் 'சேரன் செங்குட்டுவன்' சங்ககாலத்தில் வாழ்ந்த சேரர்களுள் மிகச் சிறந் தவன். கண்ணகிக்கு உருவம் அமைப்பதற்கு இமய மலையினின்று கல் கொண்டுவருவதற்கு இவன் வட நாடு சென்றது, அங்கு வடவரசர்களை வெற்றி கொண்டது, இவன் ஆட்சிமுறை, குணநலம் ஆகிய இவற்றை அப்பகுதியில் விரிவாகக் காணலாம். ிரண்டாவதாகக் கூறப்படும் 'முதல் இராசராசன்' ற்காலச் சோழர்களுள் தலைசிறந்தவன். இவ டைய வெற்றிச் சிறப்பையும், சாளுக்கியரோடு ன் கொண்ட உறவு முறையையும், இவனுடைய யப் பொதுநோக்கத்தையும், தஞ்சையில் இவன் ிராசராசேச்சுரம்' என்னும் பெரிய கோயிலைக் டியதையும், சோழர்களுடைய அரசியல் முறை ளயும் அங்கு விரிவாகக் கூறியுள்ளேன். இறுதியிற் றப்படும் அரசன் 'மாறவர்மன் அரிகேசரி'. . பி. ஆறுவது நூற்றுண்டு முதல் ஒன்பதாவது ற்றுண்டு வரையிலும் ஆட்சிசெய்து சிறப்புற்ற ண்டியருள் இவன் ஒருவன். இவனுடைய சிறப் பப் பற்றியும், இவன் காலத்தில் வாழ்ந்தவரைப் ற்றியும், பாண்டியர் அரசாட்சி முறையைப் பற்றி ம் அப்பகுதியிற் கூறியுள்ளேன்.

எனவே இப்புத்தகம் தமிழ்நாட்டுப் பெருமன்னர் வரைப்பற்றியும், அக்காலத்தில் வாழ்ந்த மக்களைப் ற்றியும் அறிந்துகொள்ளத் துணைசெய்யும் என ம்புகிறேன். உயர்தரப் பள்ளிக்கூட மாணவர்கள் தனைப் படித்துப் பயன் பெறுவார்கள் என்று நம்பு றேன்.

ஆசிரியன்

பதி

பொருளடக்கம்

பக்கம்

I. சேரன் செங்குட்டுவன்

1. தமிழ் நாடு ... 1
2. செங்குட்டுவன் ... 5
3. செங்குட்டுவன் போர்ச்செயல் ... 6
4. கண்ணகி வரலாறு ... 8
5. கண்ணகிக்குக் கோயில் எடுத்தல் ... 11
6. செங்குட்டுவன் அரசியல் ... 22
7. செங்குட்டுவன் குணநலன் ... 32

II. முதல் இராசராசன்

1. இராசராசன் முன்னோர் ... 40
2. இராசராசன் (985—1014) ... 42
3. வென்றிச் சிறப்பு ... 46
4. இராசராசேச்சுரம் ... 55
5. இராசராசன் திருமுறை கண்டது ... 67
6. இராசராசன் அரசியல் ... 69

III. மாறவர்மன் அரிகேசரி

1. மாறவர்மன் அரிகேசரியின் முன்னோர் ... 79
2. அரிகேசரியும் அவன் காலத்தவரும் ... 82
3. தமிழ்நாட்டில் அக்காலச் சமயநிலை ... 87
4. பாண்டியர் அரசியல் ... 90

OFFICE OF THE REGISTRAR OF
27 APR 1951
MADRAS

முடிமன்னர் மூவர்

I. சேரன் செங்குட்டுவன்

1. தமிழ் நாடு

பண்டைத் தமிழகம்

மொழிகளின் தொடர்பைப் பற்றி ஆராய்கின்றவர்கள் ஒரு காலத்தில் இந்திய நாடு முழுதும் தமிழ் மொழியோடு தொடர்புடைய மொழி பேசப்பட்டு வந்தது என்பர். நமது தமிழ் நூல்களைக்கொண்டு பார்க்கும்பொழுது வட இந்தியாவைத் தமிழகமாகக் கருதவில்லை என்று தெரிய வருகிறது. தமிழ் நாட்டிற்கு அவை கூறும் வட வெல்லை வேங்கட மலை; தென்னெல்லை குமரி; கிழக்கு வங்காளக் குடாக்கடல்; மேற்கு அரபிக்கடல். ஆனால் தற்பொழுதுள்ள குமரியின் தெற்கே அனேக நாடுகள் இருந்ததாகவும், அவை கடல்கோள்களால் அழிந்ததாகவும் அந்நூற்கள் நமக்குக் கூறுகின்றன.

முப்பெரும் நாடுகள்

வேங்கட மலைக்குத் தெற்கேயுள்ள தமிழகத்தை மூன்று பெரும் பிரிவாகப் பிரித்து ஆண்டனர்.

அப்பிரிவுகள் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்பன. இவற்றை ஆண்டுவந்த அரசர்கள் முறையே சேரர் சோழர் பாண்டியர் எனப்பட்டனர்.

இவற்றுள் சேரநாடு திருவிதாங்கூர், கொச்சி மலையாள ஜில்லாக்கள் ஆகிய இவை அடங்கிய பகுதி. இதன் தலைநகரம் வஞ்சி. துறைமுகப் பட்டினம் முசிறி, தொண்டி என்பன. சேரர் வானவர் எனவும் அழைக்கப்பட்டனர்.

சோழநாடு வடக்கே சிதம்பரத்தருகில் ஓடும் வட வெள்ளாற்றிற்கும், தெற்கே தென் வெள்ளாற்றிற்கும் இடைப்பட்ட நிலப்பகுதியாகும். தஞ்சாவூர், திருச்சி-ராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய ஜில்லாக்கள் இதில் அடங்கும். இதில் ஓடும் காவிரியாறு செவிலித்தாய் போன்று இந்நாட்டைப் பாதுகாத்து வளம்படுத்தியது. இந்நாட்டின் தலைநகரம் உறையூர், காவிரிப்-பூம்பட்டினம் என்பன. சோழர், வளவர் எனவும் பெயர்பெற்றனர்.

தென் வெள்ளாற்றை வடவெல்லையாகவும், குமரி முனையைத் தென் எல்லையாகவும், வங்காளக் குடாக் கடலைக் கிழக்கு எல்லையாகவும், திருவிதாங்கூரை மேற்கு எல்லையாகவும் உடையது பாண்டியநாடு. இதன் தலைநகரம் மதுரை. துறைமுகப்பட்டினங்கள் கொற்கை, தொண்டி என்பன. இந்நாடு முத்துக் குளித்தலுக்குப் புகழ்பெற்றிருந்தது.

பிற நாடுகள்

இவைகளைத் தவிர வேங்கடம் முதல் வட வெள்ளாறு வரையுள்ள நாட்டைத் தொண்டை நாடெனவும், பாலாற்றிற்கும் வட வெள்ளாற்றிற்கும் இடைப்பட்ட நாட்டை நடு நாடு எனவும், தற்பொழு துள்ள கோயம்புத்தூர், நீலகிரி இப்பகுதிகள் அடங்கிய நாட்டைக் கொங்கு நாடெனவும் வழங் கினர். இந்நாட்டை ஆண்ட மன்னர்கள் சிற்றரசர் களாய்ப் பெரும்பாலும் முற்கூறிய மூவேந்தர்களுக் கும் அடங்கியே நாட்டை ஆண்டு வந்தனராகையால், அவர்களை அவ்வளவு சிறப்பாகக் கருதுவதில்லை.

சேரர் பழமை

சேரமரபினுடைய தோற்றத்தைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனல், மிகவும் பழமையான குடிகளில் ஒன்று சேரர் குடி என்பதை மட்டும் அறிவோம். நமது இலக்கியங்களில் மிகவும் பழமையான இலக்கியங்கள் சேரரைப் பற்றிக் குறிப் பிடுகின்றன. வான்மீகர் தமது இராமாயணத்தில் சேரநாட்டைக் கேரள நாடெனவும், முரசீபத்தனம் அதன் துறைமுகப்பட்டினம் எனவும் கூறியுள்ளார். அதுவே முசிறி என்னும் பட்டினமாகும். இம் முசிறித் துறைமுகத்தில் யவனரது மரக்கலங்கள் வந்து தங்கி மிளகு முதலிய பண்டங்களை ஏற்றிச் சென்றதைத் தாலமி என்ற யவன ஆசிரியர் குறிப்

பிடுகிறுர். பாரதப் போரில் இச்சேரர் பாண்டவர் பக்கம் நின்று போரிட்டனராம். உதியஞ்சேரல் என்னும் சேரமன்னன், போரிட்ட அவ்விருதிறப் படைகளுக்கும் போர் முடியுமளவும் சோறு வழங்கினுன். கி. பி. மூன்ரும் நூற்ருண்டில் வாழ்ந்த அசோக மன்னன் தன் கல்வெட்டுக்களில் சேரரைக் கேரள புத்திரர் என்று மொழிந்துள்ளான்.

வரலாற்றுச் சான்று

சங்க காலத்தில் வாழ்ந்த சேர அரசர்களைப் பற்றி அறிவதற்குச் சான்று சங்க இலக்கியங்களே ஆகும். இவற்றுள், பதிற்றுப்பத்து, புறநானூறு என்னும் தொகை நூற்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காவிய நூற்களும் குறிப்பிடத் தக்கவை. பதிற்றுப்பத்து பத்துச் சேர அரசர்களைப் பற்றிக் கூறுகிறது. ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு அரசனைப்பற்றிக் கூறுகிறது. ஆனுல், முதற் பத்தும் இறுதிப் பத்தும் நமக்குக் கிடைக்கவில்லை. மற்ற எட்டுப் பத்துக்களும் குறிப்பிடுஞ் சேர மன்னர்கள் :

(1) இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்
(2) பல்யானைச் செல்கெழு குட்டுவன்
(3) களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
(4) கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்
(5) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
(6) செல்வக் கடுங்கோ வாழியாதன்

(7) பெருஞ்சேரல் இரும்பொறை

(8) இளஞ்சேரல் இரும்பொறை

என்னும் இவர்கள்.

2. செங்குட்டுவன்

தாயுந் தந்தையும்

செங்குட்டுவனுடைய தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் எனக் கருதப்படுகின்றான். தாய் நற்சோணை. நெடுஞ்சேரலாதன் இமயம் வரைப் படையெடுத்துச் சென்று, அங்குத் தன்னை எதிர்த்த ஆரியவரசர்களை வென்று இமயத்தின்மீது வில்லைப் பொறித்து மீண்டான். யவன அரசர்களை வென்று, அவர்களுடைய கையைப் புறத்தே கட்டி, காய்ச்சிய நெய்யை அவர்கள் தலையில் ஊற்றி, அவர்களிட மிருந்து மிகுந்த பொருள்களைப் பெற்று வந்து அவைகளைத் தன் குடிகட்குக் கொடுத்து மகிழ்ந் தான்; கடலில் வாழ்ந்த தன் பகைவரைத் தொலைத் தான். செங்குட்டுவன் உடன் பிறந்தான் இளங்கோ. இவன் செங்குட்டுவனுடைய தம்பி.

மனைவியும் மகனும்

செங்குட்டுவனுடைய மனைவி இளங்கோ வேண் மாள். இவர் இருவருக்கும் பிறந்த மகன் குட்டுவஞ் சேரல் என்பவன். பதிற்றுப் பத்து ஐந்தாம் பத்தில் தன்னைப் பாடிய புலவர் பரணருக்குச் செங்குட்டுவன் தன் மகனையே பரிசாக அளித்தான்.

இளங்கோ துறவு

சேரலாதன் சிற்றரசர் புடைசூழ வீற்றிருந்த அவையின்கண்ணே எதிர்காலம் அறிந்து கூறவல்ல நிமித்திகன் ஒருவன் நுழைந்தான். நுழைந்தவன் அங்கு வீற்றிருந்த அரசிளங்குமரர் இருவரையும் உற்று நோக்கி அவர்களில் இளையோனே ஆட்சி பெறும் இலக்கணமுடையான் என்ருன். இதனைக் கேட்ட செங்குட்டுவன் மனமுடைந்து நின்ருன்; இளங்கோ வெகுண்டெழுந்து, தான் துறவறத்தை மேற்கொள்வதாகச் சபதம் கூறித் துறவு பூண்டான்; இவ்வாறு கிடைக்கக் கூடிய அரசினைத் துறந்தான்; இதுமுதல், இவர் இளங்கோவடிகள் என்றழைக்கப் பட்டார். துறவு பூண்டவர் வஞ்சிமா நகரின் கீழ்த் திசைக்கண் உள்ள குணவாயிற் கோட்டத்துத் தங்கிஞர்; பெரும் புலவராக விளங்கிஞர். ஐம்பெருங் காப்பியங்களுட் சிறப்பாகக் கருதப்படும் சிலப்பதி காரத்தை இயற்றியவர் இவரே. இவரைச் சமணர் என்று கூறுவர் சிலர்; சைவர் என்பாருமுளர்.

3. செங்குட்டுவன் போர்ச் செயல்

சேரர்—வடவர் போர்

செங்குட்டுவன் தந்தை இறந்ததும் அவன் தாய் நற்சோணை உயிர் நீத்தனள். இவ்வாறு உயிர் நீத்த தன் தாய்க்குப் படிவஞ் சமைத்து அதனைக் கங்கை நீராட்ட வடநாடு சென்ருன். இவன் வருகையின்

நோக்கமறியாத ஆரியவரசர் சிலர் இவனை எதிர்த்துப் போரிட்டனர். அவர்களைக் கங்கைக் கரையில் வென்று, அப்படிமத்தை நீராட்டித் தன் நாடு திரும்பினான்.

கொங்கர் செங்களம்

கொங்கர் செங்களத்தில் இவனைப் பாண்டியரும் சோழரும் எதிர்த்தனர். சேரன் அவர்களை முறியடித்துக் கொடுகூர் என்னும் நகரத்தையும் அழித்தான். மைசூர் இராச்சியத்தின் தென்பகுதியான புனல் நாட்டைச் சார்ந்த பகுதியே கொடுகூர் நாடென்பது. அதன் தலைநகரம் கொடுகூர்.

கடற்போர்

கடலையே அரணாகக் கொண்டு வாழ்ந்த ஒரு கொள்ளைக் கூட்டத்தார் செங்குட்டுவனுக்கு அடிக்கடித் துன்பம் கொடுத்து வந்தனர். செங்குட்டுவன் மரக்கலங்கள் மூலம் படைகளை யனுப்பி அவர்களை வென்று, அதன் காரணமாகச் “சேரமான் கடலோட்டிய வேல் கெழு குட்டுவன்”, “கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்” என்ற பெயர்களையும் தாங்கினான்.

பிற போர்கள்

பழையன் என்பவன் பாண்டியர் படைத்தலைவன்; மோகூர் நாட்டின் சிற்றரசன். செங்குட்டுவன் நண்பனாகிய அறுகை என்பவனோடு பழையன் பகைமை பூண்டான். அறுகை விருப்பத்திற்கிணங்கச்

செங்குட்டுவன் அம்மானுகிய சோழன் இறந்ததும் அவன் மகன் பட்டத்திற்கு வந்தான். சோழ மரபினர் ஒன்பது பேர் இவனைத் தடுத்தனர். தனது மைத்துனச் சோழனுக்காக வேண்டிச் சோழ நாட்டிற்குப் படை யெடுத்துச் சென்று ஒன்பது பேரையும் வென்று மைத்துனனை அரசு கட்டிலில் ஏற்றினுன்.

4. கண்ணகி வரலாறு

காவிரிப்பூம் பட்டினத்தின் மாசாத்துவான் என்ற வணிகப் பெருமகனுக்கு மகனுய்த் தோன்றினுன் கோவலன். அந்நகரில் இவனை யொத்த பெரும் வணிகனுகிய மாநாய்கனுக்கு மகளாய்த்தோன்றினுள் கண்ணகி. கோவலனுக்கும் கண்ணகிக்கும் தக்க வயதில் மணம் நடைபெற்றது.

இருவரும் ஒரு தனி வீட்டில் இருந்து ஒற்றுமை யாக இல்லறம் நடத்தினர். அந்நகரில் ஆடல் பாடல் களில் வல்லவளாகிய மாதவி இடத்து அன்பு பூண்டு கோவலன் கண்ணகியைத் துறந்து மாதவியிடம் உறைவானுயினன். அவள் பொருட்டுத் தன் பெரும் பொருளையும் தொலைப்பானுயினன்.

அந்நகரில் இந்திரவிழா நடைபெற்ற அன்று, கோவலனும் கண்ணகியும் இந்திரவிழாவைக் கண்டு மகிழ்ந்து, கடல் நீராடி ஓரிடத்தமர்ந்தனர். அப் பொழுது மாதவி கையில் இருந்த யாழைக் கோவலன் வாங்கித் தான் வேறெருரு மாதின்மீது காதல் உடைய

வன் போலப் பாடினன். இதனைக் கேட்ட மாதவி அவ்யாழைப் பெற்று ஊடற் குறிப்போடு தான் பிறி தொருவன்மீது காதல் உடையவள் போலப் பாடினள். இதை உண்மை எனக் கொண்டு அவளைத் துறந்து சென்றான் கோவலன்.

மாதவியைப் பிரிந்த கோவலன் கண்ணகியை அடைந்து ‘பொய்யான வேசியர் வாழ்க்கையில் ஈடு பட்டுப் பொருள் அனைத்தையும் தொலைத்தேன்,’ எனச் சொல்லி வருந்தினான். மாதவிக்குக் கொடுக்கப் பொருள் இல்லாது வருந்துகிறான்போலும் என்று நினைத்த கண்ணகி தன் சிலம்பைக் கழற்றிக் கொடுத் தாள். அதனை முதற் பொருளாக வைத்து வியாபாரம் செய்து இழந்த பெரும்பொருளை ஈட்டுவதென இரு வரும் மதுரைக்குப் புறப்பட்டனர்.

வழியில் கவுந்தியடிகள் என்னும் சமணத் துறவி யைக் கண்டு வணங்க, அவளும் மதுரைக்கு வரு வதாகக் கூற, மூவரும் மதுரை அடைந்தனர்.

மதுரையில் மாதரி என்னும் இடைக்குல மாதிடம் கவுந்தியடிகள் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுத்துப் பாதுகாத்துக் கொள்ளுமாறு கூறினள். அன்று கோவலனும் கண்ணகியும் மாதரி வீட்டிலேயே தங்கினர்.

மறுநாட் காலை கண்ணகி சமைத்த உணவை உண்டு களித்துக் கண்ணகி கொடுத்த சிலம்பை விலை

பகர்ந்து வர மதுரையின் உள்ளே நுழைந்தான் கோவலன். வழியிற் கண்ட பொற்கொல்லனிடம் சிலம்பைக் காட்ட, அவன் அஃது அரசியே வாங்கும் தகுதியுடையது என்று கூறிக் கோவலனைத் தன் வீட்டில் இருக்கச் செய்து அரண்மனையை அடைந்தான். அரசமாதேவி கொடுத்த சிலம்பைத் திருடிப் பதில்கூற முடியாது வருந்திக்கொண்டிருந்த பொற்கொல்லன், அரசனைக் கண்டு தன்னிடமிருந்த அரசியின் சிலம்பைத் திருடிய கள்வன் தன் வீட்டகத்தே இருப்பதாகக் கூற, அரசனும் வினைவிளை காலமாதலின் தேருது, “ கள்வனைக் கொன்றச் சிலம்பைக் கொணர்க ” என்றனன். கோவலன் கள்வனெனக் கொல்லப்பட்டான்.

கொல்லப்பட்ட செய்தியைக் கேட்ட கண்ணகி சீற்ற முற்றெழுந்தாள். இறந்த கணவனைக் கண்டு அவனுடன் பேசிய பின்பு அரண்மனையை அடைந்து, நெடுஞ்செழியனை அவைக்களத்தே கண்டு, தன் கணவன் கள்வன் அல்லன் எனவும், தன் சிலம்பின் உள்ளே இருப்பது மாணிக்கப் பரல் எனவும் கூறி நின்றாள். அரசன் தன் சிலம்பின் உள்ளே இருப்பது முத்துப் பரல் என்றான். பொற்கொல்லன் அரசனுக்குக் கொடுத்த சிலம்பைக் கண்ணகி யுடைக்க, மாணிக்கப் பரல் வெளியே தெறித்தது. உண்மையுணர்ந்த அரசன், ‘ஆராயாது கொலை செய்த யானே

கள்வன்,' எனக்கூறி உயிர் துறந்தான். அவன் மனைவியும் உடன் உயிர்துறந்தாள்.

அரண்மனையை விட்டு வெளியே வந்த கண்ணகி மதுரையை எரியூட்டினாள். மதுரைத் தெய்வம் அவளுக்கு முற்பிறப்பைக் கூறி, அன்றைய பதினான்காம் நாள் கண்ணகி தன் கணவனைக் காண்பாள் எனவும் கூறிச் சென்றது.

மதுரையைத் துறந்து வெளியேறிய கண்ணகி வையை யாற்றின் வடகரை வழியே சென்று சேர நாட்டை அடைந்தாள். கணவனை இழந்த பதினான் காம் நாள் சேரநாட்டு மலையின் வேங்கைமரத்தடியில் கண்ணகி நிற்ப, விண்ணவர் கோவலனைக் கண் ணகிக்குக் காட்ட, கோவலன் விமானத்தில் இறங்கி வந்து கண்ணகியை ஏற்றிச் சென்றான். இதனைக் கண்ட குன்றக்குறவர் வியந்தனர்.

5. கண்ணகிக்குக் கோயில் எடுத்தல்

மலைவளங் காணல்

மலைவளங் காண விருப்புற்ற செங்குட்டுவன் தன் மனைவி இளங்கோ வேண்மாளுடன் புறப்பட்டு, பேரியாற்றின் கரையில் மணல் நிறைந்த எக்கர் ஒன் றில் தங்கினான். அவர்களுடன் இளங்கோவடிகளும், சாத்தனார் என்ற பெரும் புலவரும் இருந்தனர். அங்கு எழுந்த பலவகை யொலிகளும் அரசனை மகிழ் வித்தன. அரசன் வருகையை அறிந்த வேட்டுவர்

தங்கள் மலைநாட்டில் கிடைக்குஞ் சந்தனம் அகில் முதலிய மணம் மிக்க பொருள்களையும், தேன் தினைமா தெங்கின்பழம் மாவின் பழம் முதலிய வற்றையும் சுமந்து வந்து அரசன் முன் வைத்து "அரசே! நாங்கள் உம் அடியவர்கள். வாழ்க நின் கொற்றம். யாங்கள் வாழும் மலையில் வேங்கை மரத் தின் நிழலில் துயரமுற்று வாடிய பெண் ஒருத்தி வந்து நின்ருள். நிற்க, தேவர்கள் அவள் கணவனை அவளுக்குக் காட்டினர். அவள் கணவனுடன் விண் ணுலகை அடைந்தாள். அவள் யாரோ? எந்நாட் டினளோ? அறியேம்," எனக் கூறினர். மதுரை எரியுண்ட பொழுது அங்கிருந்த சாத்தனர், அவள் கண்ணகி என்பதையும், அவள் வரலாற்றையும் அர சனுக்குக் கூறினர்.

கோயிலெடுக்கும் எண்ணந் தோன்றல்

கண்ணகி வரலாற்றைக் கேட்ட செங்குட்டுவன் தன் மனைவியை நோக்கி, "கணவனுடன் உயிர் நீத்த பாண்டிமாதேவியினும், சினத்துடன் மதுரை நீங்கி நம்நாடு வந்த கண்ணகியினும் யார் வியக்கத்தக்க வர்?" என வினவ, வேண்மாள், "தன் கணவன் இறந்ததும் உடன் இறந்த பாண்டிமாதேவி விண் ணுலகில் பெருந்திருவுறக் கடவள். நம் நாடு வந்த கண்ணகியை நாம் வழிபடுதல் இன்றியமையாதது," என்று விடை பகர்ந்தாள்.

தேவி இதனைக் கூறுதலும், செங்குட்டுவன் கண்ணகிக்குப் படிமஞ் சமைக்க இமயத்தினின்றும் கல் எடுத்துக் கங்கையில் நீராட்டிக் கொண்டுவருதலே தன் குலப்பெருமைக்கு ஏற்றதெனக் கொண்டு, தன் வடநாட்டு யாத்திரையில் தன்னை எதிர்க்கும் பகைவர்களை வென்று வருவதாகக் கூறினன்.

வடநாட்டினருக்கு அறிவித்தல்

இதனைக் கேட்ட வில்லவன்கோதை என்ற தானைத் தலைவன், "அரசரேறே! உம்மை எதிர்த்துப் போரிடுவோரும் உண்டோ? எங்கோன் செல்வது படிமஞ் செதுக்க ஒரு கல்லுக்காதலின், வடநாட்டு அரசர்க்கெல்லாம் வில் கயல் புலி இவற்றை இலச்சினையாகவிட்ட திருமுகம் ஒன்றை முன்பே அனுப்புதல் வேண்டும்," என்றான். இதனைக் கேட்ட அழும்பில்வேள் என்னும் அமைச்சன், "நம் பகைவருடைய ஒற்றர்கள் நம் வஞ்சிமா நகரிலேயே இருக்கின்றனர். ஆகையால், நம் வடநாட்டு யாத்திரையைப் பற்றி நம் வஞ்சிமா நகரில் பறையறைந்தால், ஒற்றர்கள் வடநாட்டுத் தம் அரசர்களுக்கு நம் வருகையை அறிவிப்பர்," என்றான். அரசனும் வஞ்சிமா நகர் அடைந்து, யானைமேல் முரசேற்றி, "எம்மரசன் வாழ்க! இமயத்தினின்றும் கற்கொண்டு வருதற்கு எம்மரசன் வடநாடு வருகின்றான். வடவரசர் அவனை எதிரேற்றுத் திறை யிடுங்கள். திறை கொடுக்கா

விட்டால், எம்மரசன் கடலிற் கடம்பெறிந்த வெற்றியையும், இமயத்தில் சிலை பொறித்த வெற்றியையும் மனத்துட் கொள்ளுமின். அதனையும் நினைக்கவில்லையாயின் உம் மனைவியைத் துறந்து வாழுவதற்கு ஆயத்தமாய் இருமின்,'' என்று பறையறைந்தனன்.

அரசன் புறப்பாடு

பறையறைந்த பின்னர் அன்று மாலை அரசன் ஆசான், அமைச்சன், தானைத்தலைவன், பெருங்கணி முதலியோர் புடைசூழ அரசவையில் அமர்ந்து, ''வட நாட்டில் நிகழ்ந்த சுயம்வரம் ஒன்றில் இருந்த ஆரிய மன்னரிற் சிலர், 'தென்னாட்டு மன்னர் இமயம் மீது விற்பொறித்த அன்று எம்போலும் மன்னர் இங்கில்லை போலும்' என்று இகழ்ந்து கூறினர். இதனை யான் யாத்திரை செய்வார் வாயிலாக உணர்ந்தேன். அவரைப் புறங்கண்டு அவர் தலைமீது படிமக் கல்லை ஏற்றித் திரும்பேனாயின், என்னாட்டில் வாழும் மக்களுக்குத் துன்பம் செய்யும் கொடுங்கோலன் ஆகுக,'' எனச் சபதம் கூறினன். அப்போது சோதிடம் வல்லான், ''வெற்றி தரும் நற்பொழுது இது; இப்பொழுதே புறப்பட வேண்டும்,'' என்று கூற, அரசனும் தன் வாளையும், வெண்கொற்றக் குடையையும் யானை மீதேற்றி வடதிசை நோக்கிச் செல்ல விடுக்க, அவை வடதிசை நோக்கிப் புறப்பட்டு வஞ்சிமா நகரின் வடபுறமுள்ள கோட்டையில் தங்கின.

மறுநாட் காலை எழுந்து நீராடி, தம் வழிபடு கடவுளாகிய சிவபெருமானை வணங்கி, அவன் தாள்களைத் தன் தலையில் தாங்கி, யானைமீது அமர்ந்தனன். ஆடக மாடத்தில் அறிதுயில் கொண்ட திருமால் பிரசாதத்தை அப்பொழுது அந்தணர் அவன் கையில் கொடுக்க, அதனை வாங்கி, சிவபிரான் அடிகளைத் தன் தலைமீது முன்னரே தாங்கி யிருந்த காரணத்தால் மார்பில் அணிந்தான், நாடக மாதர் துதிக்க, யானை வீரரும், குதிரை வீரரும் வாட்படை வீரரும் ஆர்ப்பரிக்கப் புறப்பட்டு, தூசிப்படை முன் செல்ல, அரசன் நீலகிரி மலையிற் சென்று தங்கினன்.

நீலகிரியில்

அப்பொழுது சஞ்சயன் என்ற தூதுவர் தலைவன் அரசனை வணங்கி, "வேந்தர் வடநாடு செல்வது இமயத்தினின்றும் கல் கொணர்வதற்கே யாதலின், 'யாங்களே அக்கல்லை எடுத்து நீர்ப்படை செய்து தங்களிடம் தருகிறோம்' என்று உங்களோடு நட்புரிமை வேண்டிய நூற்றுவர் கன்னர் கூறினர்," என்று கூறினன். அதனைக் கேட்ட அரசன், "கனக விசயர் என்பார் வடநாட்டு விருந்தொன்றில் எம்மை இகழ்ந்து கூறினராம். அவரைப் புறங்காணுதற் பொருட்டே யாம் இப்பெரும் படையுடன் செல்கின்றோம். நீவிர் முன்பே சென்று நம் படைகள் கங்கையைக் கடத்தற்கு மரக்கலங்கள் ஆயத்தம்

செய்யுமின்,'' என்று கூறி அனுப்பினன். பாண்டியன் அனுப்பிய திறைப் பொருள்கள் வர, அவற்றைப் பெற்றுத் தன் முத்திரை இட்ட திருமுகம் ஒன்றை அவனுக்கு அனுப்பிய பின்பு நீலகிரியினின்றும் பெயர்ந்தான்.

கனக விசயர் கைதியானமை

கங்கைக் கரையை அடைந்த செங்குட்டுவன் படை முன்பே அங்கு எதிர்நோக்கி இருந்த மரக் கலங்கள் உதவியால் கங்கையைக் கடந்து வடகரையை அடைந்தது. அங்கு நூற்றுவர் கன்னர் செங்குட்டுவனை எதிரேற்று உபசரித்தனர். அது முடிந்ததும், செங்குட்டுவன் தன் படைகளுடன் உத்தரகோசலம் சென்று பாசறையில் தங்கினான். அவன் வருகையை அறிந்த கனக விசயர் உத்திரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் என்ற வடநாட்டு வேந்தர்களைத் துணையாகக் கொண்டு செங்குட்டுவனை எதிர்த்தனர். செங்குட்டுவன் பகைவர் படைமீது புலிபோலப் பாய்ந்து அவரை ஓடச்செய்தான். கனக விசயர் கைதியாயினர். மற்றையோர் சடைதரித்தும், காவியுடுத்தும், நீறணிந்தும், பீலி கைக்கொண்டும் போர்க்களத்திலிருந்து தப்பியோடினர். இப்போரில் பதினெட்டு நாழிகையில் செங்குட்டுவன் வெற்றி கண்டான்.

கனக விசயர் கல் சுமத்தல்

போர் முடிந்ததும், செங்குட்டுவன் வில்லவன் கோதையை அழைத்து இமயத்தில் வாழும் முனிவர்களுக்கு எத்தைய இன்னலும் ஏற்படாதவாறு காத்து, இமயத்தினின்றும் கல் கொண்டுவரக் கட்டளை இட, அவனும் இமயத்தினின்றும் கல்லெடுத்து, அதனைக் கனக விசயர் தலைமேலேற்றிக் கங்கையின் வடகரை வந்தடைந்தான்; அதனைக் கங்கையில் நீராட்டிய பின்னர்க் கங்கையின் தென்கரை யடைந்து அங்கு நூற்றுவர்கன்னர் அமைத்திருந்த பாடியில் தங்கினன்.

மாடலன் சொல்

அதுபொழுது, அங்கு வந்த மாடலன், "மாதவி கடற்கரையில் பாடிய கானல்வரி கனக விசயர் தலையை நெரித்தது," என்று கூறி, அதற்கு விளக்கமும் கூறினன். தான் பொதிகையை வணங்கி குமரியாடி மதுரையடைந்ததையும், அப்பொழுது கோவலன் கொலை செய்யப்படக் கண்ணகி மதுரையை எரித்ததையும், அவற்றை அறிந்த மாதரி தீயிற் பாய்ந்து உயிர் துறந்ததையும், தன் ஊராகிய காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்து அவற்றைக் கூற மாசாத்துவானும் மாநாய்கனும் துறவு பூண்டதையும், அவர்களுடைய மனைவியர் உயிர் துறந்ததையும், அவற்றையறிந்த மாதவி துறவு பூண்டதையும், மணிமேகலை நாட்டியத் தொழிலைக் கைவிட்டு

துறவறத்திற் பழகி வருவதையும், காவிரிப்பூம்பட்டினத்தில் அவர்கள் இறப்பதற்குக் காரணமாய் இருந்த பாவந் தொலையத் தான் கங்கை நீராட வந்திருப்பதையும் அரசனுக்குக் கூறினன். செங்குட்டுவன் தன் நிறை அளவுள்ள பொன்னை அவனுக்குப் பரிசாகக் கொடுத்து அனுப்பினான்.

வஞ்சிக்குத் திரும்புதல்

நிமித்திகர் தலைவன், "வஞ்சியைத் துறந்து வந்து முப்பத்திரண்டு மாதங்களாகின்றன" என்று கூறினன். அரசன் வடநாட்டுப் போரில் தோற்றுத் தவவேடம் புனைந்து ஓட முயன்ற ஆரியவரசர்களைச் சோழ பாண்டியர்களுக்குக் காட்டி வருமாறு ஆட்களை அனுப்பிய பின்பு வஞ்சிக்கு மீண்டான். கணவன் பிரிவால் வாடிவதங்கிய இளங்கோ வேண்மாள் கணவன் வரவைக் கேட்டதும் மகிழ்ந்தாள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானில மக்களும் தம்மரசன் வட நாட்டில் வெற்றிபெற்று வருவதைப் புகழ்ந்து பாடி வரவேற்றனர். அரசனும் வஞ்சியை அடைந்தான்.

அரசன் அவைக்களம்

அன்று வெண்ணிலா தோன்ற, நிலாமுற்றத்துத் தன் மனைவியுடன் அரசன் இனிது வீற்றிருந்தான். சாக்கையன் என்ற கூத்தில் வல்லான், செஞ்சடைக் கடவுள் திரிபுரமெரித்து உமையை ஒரு பக்கத்தே

கொண்டு ஆடிய 'கொட்டிச் சேதம்' என்னும் கூத்தினை ஆடி அவர்களை மகிழ்வித்தான். அது முடிந்ததும் அரசன் அவைக்களம் அடைந்தான். ஆரியவரசர்களைச் சோழ பாண்டியர்களிடம் கொண்டு சென்றவர்கள் அரசனை அணுகி, "போரில் புறங்கொடுத்து உயிர்தப்பி யோடிய இவர்களைப் பிடித்துவருதல் வெற்றியாகாது," என்று சோழன் கூறியதையும், "போரில் தோற்றுச் சிவனடியார் போன்று வேடம் தரித்துத் தப்பியோட முயன்றவரைப் பிடித்துவருதல் புதுமையே," என்று பாண்டியன் கூறியதையும் கூறினர். அதனைக்கேட்ட அரசன் சினங்கொண்டான். அங்கிருந்த மாடலன் அரசனுடைய சினத்தைத் தவிர்த்து, இத்தனை நாளும் மறக்களவேள்வியில் மனதைச் செலுத்திய செங்குட்டுவன் இனி அறக்கள வேள்வி செய்தல் வேண்டுமென்று சொல்லவே, அரசனும் வேள்வி தொடங்குவதற்கு ஆணை பிறப்பித்தான். கனக விசயரைச் சிறையினின்று விடுவித்து, அவரை வேளாவிக்கோ மாளிகையில் இருக்கச் செய்தான். பத்தினிக் கடவுளுக்கு விழா நடக்குமளவும் அவர்களுக்கும் மற்ற ஆரிய அரசர்களுக்கும் வேண்டிய வசதிகள் செய்து, விழா முடிந்த பின்னர் அவர்களுடைய நாட்டிற்கு அவர்களை அனுப்பிவைக்கக் கட்டளை பிறப்பித்தான்; தன் நாட்டிலுள்ள மற்றக் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு பணித்தான்.

கடவுண் மங்கலம்

பத்தினிக்கு அழகான கோயிலொன்றைக் கட்டினர். இமயத்தினின்றும் கொண்டுவந்த கல்லில் சிற்பக் கலையில் வல்லவர் கண்ணகியின் வடிவைச் செதுக்கினர். அழகிய அச்சிலைக்கு வேலைப்பாடு அமைந்த அணிகளைப் பூட்டினர் ; சிறந்த ஆடைகளை உடுத்தினர் ; அர்ச்சனை செய்தனர் ; திக்குத் தேவதை களைக் கடைவாயிலிலே நிறுத்தினர். இவ்வாறு வேள்வியும் விழாவும் நாள்தோறும் நடைபெறுமாறு கண்ணகியைக் கடவுளாகப் பிரதிஷ்டை செய்தனர்.

கற்புத் தெய்வம்

கோவலன் கொலையுண்டதை அறிந்த கண்ணகி யின் செவிலித்தாயும், தலைமைத் தோழியும், தேவந்தி யென்னும் பார்ப்பனத் தோழியும் கண்ணகி யைக் காணவேண்டி மதுரை வந்தனர். அங்கு ஐயையைக் கண்டு நிகழ்ந்ததை அறிந்தனர். ஐயையும் அவர்களுடன் புறப்பட, நால்வரும் வைகைக்கரை வழியே நடந்து கண்ணகியின் கோயிலை அடைந்தனர். செங்குட்டுவனுக்குத் தாம் இன்னர் என்பதைக் கூறி, கண்ணகி பிரிவை நினைந்து அரற்றி நின்றனர். நிற்க, பொன்னலாகிய சிலம்பும், மேகலையும், கைவளையல்களும், வயிரத் தோடும், மற்றும் பல அணிகளும் அணிந்த மின்னற்

கொடி போன்ற உருவம் ஒன்று விண்ணில் தோன்றிற்று. செங்குட்டுவன் "இஃதென்ன!" என வியந்தான். அப்பொழுது கண்ணகி தன் கடவுள் வடிவைக் காட்டி, தன்னைக் காண வந்த மகளிரை நோக்கி, "தோழிகாள்! பாண்டியன் குற்றமற்றவன். விண்ணவர்கோமான் கோயிலில் அவன் நல் விருந்தாயினன். நான் அவ்வரசன் மகள். இம்முருகன் குன்றில் நான் எப்பொழுதும் விளையாடுவேன். நீங்களும் என்னுடன் விளையாட வாருங்கள்," என்று கூறினாள். அதனைக் கண்டு நின்றவர் அனைவரும் வியந்து கண்ணகியைப் பாராட்டினர்.

வரந் தருதல்

செங்குட்டுவன் கண்ணகி கோயிலுக்கு வேண்டிய நிலங்களைக் கொடுத்தான். பூசை முதலியவற்றைக் கவனிக்க ஒரு பெண்ணை நியமித்தான். கோயிலை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றான். சிறைவீடு பெற்ற கனக விசயரும், கொங்கிளங் கோசரும், மாளுவவேந்தரும், இலங்கை அரசன் கயவாகு வேந்தனும் அத்தேவியை வணங்கி, "தேவி! எங்கள் நாட்டில் நாங்கள் எடுக்கும் கடவுண் மங்கலத்திலும், வஞ்சிமா நகரில் எழுந்தருளியது போன்று எழுந்தருளிவந்து அருள்புரிய வேண்டும்," என்று வேண்டி நின்றனர். அப்பொழுது விண்ணில் "தந்தேன் வரம்" என்னும் ஒலி தோன்றியது.

6. செங்குட்டுவன் அரசியல்

கோனாட்சி

செங்குட்டுவன் காலத்தில் தமிழ்நாட்டில் நிலைபெற்றிருந்த அரசியல் முறை கோனாட்சியே யாகும். தற்பொழுது இருப்பதைப்போன்ற குடியாட்சி இருந்தது என்று கூறமுடியாது. நாட்டிற்குத் தலைவன் அரசன். அரசனுக்கு அளவுகடந்த அதிகாரமும், பெருமதிப்பும் இருந்துவந்தன. மக்கள் அரசனைக் கடவுள் என்றே கருதிவந்தனர். இறை என்ற சொல் கடவுளையும் அரசனையும் குறிப்பிடுவதற்குக் காரணம் இதுவே. உலகத்தில் நடைபெறும் இயற்கை நிகழ்ச்சிகள் தம் நிலையிற் பிறழ்ந்து நடந்தால், அதற்கு அரசனே காரணம் எனக் கருதி வந்தனர். ஆகையால், அரசனும் இத்தகைய நிகழ்ச்சிகள் தன் நாட்டில் நிகழ்ந்துவிடுமோ என்ற அச்சத்தோடு ஆட்சிசெலுத்தி வந்தான். குடிகளின் நன்மையை எப்பொழுதும் நாடி வந்தான்.

மலைவளங் காணச்சென்ற செங்குட்டுவன், சாத்தனார் வாயிலாகக் கண்ணகி வரலாற்றையும், பாண்டியன் உயிர் துறந்ததையும் அறித்தான். அறிந்தவன்,

> " மழைவளங் கரப்பின் வான்பேர் அச்சம்,
> பிழையுயிர் எய்திற் பெரும்பேர் அச்சம்,
> குடிபுர வுண்டுங் கொடுங்கோல் அஞ்சி,
> மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்,
> துன்பம் அல்லது தொழுதக வில் "

—என்று அரசனுடைய கவலைகளை எடுத்துக் கூறினான். மழை பெய்யாது போயின் அரசன் குடிமக்கள் பயிரிடமுடியாதே என நினைத்து அஞ்ச வேண்டும்; உயிர்களுக்கு ஏதாவது தீமை நிகழ்ந்தால், அது காரணமாகவும் அஞ்சவேண்டும். குடிகளைப் பாதுகாக்கும் பொழுது, ஏவலாளர்கள் தீமை வாராது பாதுகாக்க வேண்டும். எனவே, அரசனாய் இருத்தல் போகத்திற்காக என்று கொள்ளக்கூடாது. இவ்வாறெல்லாம் அச்சம் விளைவதால், அரசாட்சி துன்பமானது என்று செங்குட்டுவன் சொல்லிய விதத்தால், அவனுடைய மனநிலை நன்கு புலப் பட்டுள்ளது.

ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும்

பண்டைக்கால முறைப்படி செங்குட்டுவனுடைய அரசியலில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்ற இரு திறத்தாரும் பெரும் பங்கு எடுத்துக் கொண்டனர். இவர்களைக் கலந்தே அரசன் ஆட்சியை நடத்திவந்தான். அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் என்ற ஐவரும் ஐம்பெருங் குழுவைச் சார்ந்தவர். செங்குட்டுவனுடைய அமைச்சன் அழும்பில்வேள் என்பவன். இவன் நுட்பமான அறிவுடையவன்; நாட்டு நிலையைப்பற்றித் தெளிவாக அறிந்தவன். செங்குட்டுவன் தனது வட நாட்டு யாத்திரையை வடவரசர்களுக்கு அறிவிக்க

வேண்டும் என்று கருதிய பொழுது, " அச்செலவைப் பற்றி நம் வஞ்சிமா நகரிலேயே பறையறைந்தால் வடவரசர் அறிந்துகொள்வார்," என்று கூறியவன் இவனே. செங்குட்டுவன் தன் அரசவையில் 'வட வரசரை வென்றுவருவேன்' என்று வஞ்சினம் கூறிய பொழுது அவனுடைய சினத்தைத் தணித்தவன் புரோகிதன் அல்லது ஆசான். செங்குட்டுவனுடைய தரைப் படைக்குத் தலைவன் வில்லவன்கோதை என்பவன். இவன் வடநாட்டு யாத்திரையிற் படை களுக்குத் தலைமைபூண்டு ஆரியவரசர்களை வெற்றி கண்டவன். செங்குட்டுவனுடைய தூதுவர்களுக்குத் தலைமை வகித்தவன் சஞ்சயன் என்பான். இத் தூதுவர் தம்மரசர் அனுப்பும் செய்திகளை வேற்றரசர் களுக்குக் கொண்டு செல்லுதல் வேண்டும். போர்க் காலங்களிலேயும் அரசனுடன் இருந்து அரச னுடைய கட்டளைகளை நிறைவேற்றி வந்தனர். நூற்றுவர்—கன்னர் விடுத்த செய்தியைச் சஞ்சயனே மன்னர்க்கு அறிவித்தான். மன்னன் சஞ்சயனை அனுப்பி, நூற்றுவர் கன்னர் துணைக்கொண்டு தன் படை கங்கையைக் கடத்தற்குரிய மரக்கலங்களை அமைக்குமாறு சொன்னான். இவர்களைக் கஞ்சுக முதல்வர் எனவும் கூறுவர். சட்டையும் தலைப்பாகை யும் அணிந்திருந்தனர். பாண்டியன் கொடுத்த திறைப் பொருள்களைப் பெற்றுக் கொண்டமைக்கு,

தன் முத்திரை இட்ட கடிதத்தை இக்கஞ்சுக முதல்வர் மூலம் அரசன் அனுப்பினான். சாரணர் எனப்படுபவர் ஒற்றர். இவர்கள் அரசனுக்குக் கண்போன்றவர்; பிற நாடுகளில் மறைந்து வாழ்ந்து தம்மரசனுக்குச் செய்தியனுப்பினர்.

கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், குதிரைவீரர் என்பவர் எண்பேராயத்தார் எனப் படுவர். இவர்களும் செங்குட்டுவன் அரசியலில் பணியாற்றி வந்தனர்.

இவர்களே யன்றிக் கருமவினைஞர், கணக்கியல் வினைஞர், தருமவினைஞர், தந்திர வினைஞர், பெருங் கணி என்ற அரசியல் அதிகாரிகளும் செங்குட்டுவன் காலத்திருந்தனர். இவர்களை இளங்கோவடிகள்,

> " ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்
> வெம்பரி யானை வேந்தர்க் கோங்கிய
> கரும வினைஞருங் கணக்கியல் வினைஞரும்
> தரும வினைஞரும் தந்திர வினைஞரும் "

என்று கூறுவதிலிருந்து அறிகிறோம். இவர்களெல் லாம் செங்குட்டுவன் அவைக்களத்திற் கூடியிருந்து செங்குட்டுவனது வடநாட்டு யாத்திரைக்கு வேண்டிய வற்றை எடுத்துக் கூறினர்.

செங்குட்டுவன் இலச்சினை

சேரர்களுடைய முத்திரை வில். செங்குட்டுவன், அவன் காலத்தில் வாழ்ந்த பாண்டிய சோழர்களைவிட

மிகவும் வலிமை படைத்தவன். பாண்டியமன்னன் செங்குட்டுவனுக்குத் திறைகொடுத்து அனுப்பியதையும், தன் மைத்துனச் சோழனுக்காக ஒன்பது சோழர்களைச் செங்குட்டுவன் வென்றதையும் முன்பே கண்டோம். இவ்வாறு அக்காலத்து வாழ்ந்த மூவேந்தருள்ளும் செங்குட்டுவனே படைவலிமை பெற்றுத் தலைமை பொருந்தி நின்றானாதலின், இவனுடைய முத்திரை வில் புலி கயல் ஆகிய மூன்றையும் பெற்றிருந்தது. வில்லவன்கோதை "வடதிசை மருங்கின் மன்னர்க்கெல்லாம் தென்றமிழ் நன்னாட்டுச் செழுவிற் கயற்புலி மண்டலை யேற்ற வரைக," என்று கூறுவதிலிருந்து நாம் இதனை அறிகிறோம்.

நாட்டின் வருவாய்

பண்டைக்கால முறைப்படி நாட்டிற்கு மூன்றுவிதமான வருவாய்கள் அமைந்திருந்தன. இவற்றைத் திருவள்ளுவர் "உறுபொருள், உல்குபொருள், தன் ஒன்னார்த் தெறுபொருள்" என்பர். உறுபொருளாவது புதையல் போன்றது. இது அரசாங்கத்தை அடைய வேண்டும். உல்கு பொருளாவது சுங்கத்தால் வரும் பொருள். வெளிநாடுகளுக்குச் செல்லும் பொருளுக்கும் தம் நாட்டிற்கு வரும் பொருளுக்கும் வரி வாங்கினர். இப்பொருள்களின்மீது அரசனுடைய முத்திரை இட்டு அனுப்புவர். அப்பொருளின்மேல் பெயர், அளவு முதலிய எழுதப்பட்டிருக்கும். இதனைக் கண்

ணெழுத்துப் படுப்பது என்று சிலப்பதிகாரம் கூறும். இனி, அரசன் பகையரசனுடைய நாட்டைப் பிடித்து அங்கிருந்து கொண்டுவரும் பொருளும், பகையரசர் கொடுக்கின்ற திறைப்பொருளும் அரசனையே சாரும். பாண்டியன் முதலியோர் செங்குட்டுவனுக்குத் திறை கொடுத்தமை முன்பே கண்டோம். மக்கள் தங்கள் நிலங்களுக்கு இறை கொடுத்து வந்தனர். இதனைக் காணிக்கடன் என்பர். இதுவும் அரசனுடைய வரு வாய்களில் ஒன்று. கண்ணகி விழாவன்று "வரி தவிர்க்க," என்று செங்குட்டுவன் ஆணை இட்டான்.

படைகள்

செங்குட்டுவனிடம் தேர், யானை, குதிரை, காலாட் படை என்ற நால்வகைப் படைகளுமிருந்தன. செங்குட்டுவன் வடநாடு செல்லும் பொழுது அங்குச் சென்ற ஒவ்வொரு படையின் கணக்கை ஆசிரியர் கொடுக்கிறார். யானை நூறும், குதிரை பதினாயிரமும் பண்டங்களேற்றிய வண்டிகள் இருபதினாயிரமும் சென்றன. இவற்றைக் கண்காணிக்கும் பட்டை இட்ட அதிகாரிகள் பதினாயிரம் பேர் சென்றனர். இப் படைகளைத் தவிர, அரசனுடன் நாடகக் கணிகை யரும், வேழம்பர்களும், வாத்தியம் வாசிப்போரும் சென்றனர். செங்குட்டுவன் வஞ்சியை விட்டுப் புறப்படும்போது தூசிப்படை கடற்கரையைத் தொடும் படிச் சென்றது. அப்படை செல்லும்பொழுது மலை

முதுகு நெளிந்தது. படை சென்றவிடத்தில் நிரந்தர மான பாதை உண்டாயிற்று.

இவற்றைத் தவிர, செங்குட்டுவனிடம் பெரிய கப்பற் படை யொன்றும் இருந்ததென அறிகிறோம். அப்படையைக் கொண்டே இவன் கடலில் வாழ்ந்த பகைவரை வென்று அடக்க முடிந்தது.

போர் முறை

செங்குட்டுவன் பண்டைத் தமிழர் முறையைப் பின்பற்றியே போர் நிகழ்த்தினன். குறித்த நல்ல பொழுதில், அரசன் போருக்குப் புறப்பட முடிய வில்லையானல், தன் வெண்கொற்றக் குடையையும் வாளையும் யானை மீதேற்றி அத்திசை நோக்கி விடுத் தல் அக்கால மரபு. அவ்வாறே செங்குட்டுவன் தன் வெண்கொற்றக் குடையையும் வாளையும் யானை மீதேற்றி வடதிசை நோக்கி விடுத்து அங்குள்ள கோட் டையில் அவற்றை வைத்தான். இதனை "நாட் கோள்" என்றும், "குடைமங்கலம்" என்றும் கூறுவர். மறுநாள் அரசன் போருக்குப் புறப்பட் டான்.

போருக்குப் புறப்படுமுன், அக்கால முறைப்படித் தன் படைகளுக்குப் பெருஞ் சோறு வழங்கினன். அதனை உண்டு மகிழ்ந்து ஆரவாரித்துப் படைகள் வட திசை நோக்கிப் புறப்பட்டன. இவ்வாறு உண்டு மகிழ்தலைப் பெருஞ் சோற்றுநிலை என்பர்.

தமிழ் முறைப்படியே பல துறைகளையும் கையாண்டு கனகவிசயர்களோடு போர்புரிந்து இறுதியில் வாகை சூடினன் செங்குட்டுவன்.

போரில் மிகவும் வீரத்துடன் போர்புரிந்தவர்களுக்கு, அவர்களுடைய ஆற்றலைப் பாராட்டிப் பெரிய பட்டங்கள் கொடுத்தலையும், போரில் இறந்துபட்டவர்களுடைய சந்ததியாருக்குப் பொருள் நிலம் முதலியவற்றைக் கொடுத்தலையும் இன்று நாம் காண்கிறோம். கனகவிசயரை வென்றபின் கங்கையின் தென்கரை சென்று தங்கிய செங்குட்டுவன், போரில் வீரசுவர்க்கம் அடைந்தவர், தலையுந் தோளும் அறுபட்டு இறந்தவர், உறவினரும் மகளிரும் உடன் மடிய இறந்தவர் ஆகிய இவர்களுடைய மைந்தர்களையும், தூசிப்படையில் நின்று வெற்றி கண்டவர்களையும், பகைவர்களுடைய தேர் வீரர்களைக் கொன்று குவித்தவர்களையும், பகைவர்களுடைய தலைகளை அறுத்திட்டவர்களையும், மார்பில் விழுப் புண்ணுடன் பகைவர்களைத் துரத்தி வெற்றி கண்டவர்களையும் தம்பால் வருக என்றழைத்து, அவர்களுடைய வெற்றியைப் பாராட்டி, பொன்னாலாகிய வாகைப்பூக்களை மிகுதியாகக் கொடுத்துப் பெருமைப்படுத்தினான்.

போரில் தோற்ற அரசர்களைச் சிறைசெய்து தன் நாடு கொணர்ந்தான். அவர்கள் தன் பெருமையை ஒப்புக் கொள்ளுமாறு செய்தான். தன் பெருமையை

உணர்ந்து பணிந்த மன்னர்களைச் சிறந்த முறையில் நண்பர்களாகவே நடத்தி வந்தான். போர்க்களத்திற் பகைவர்கள் துறவிகளாக வேடம் புனைந்து தப்பியோட முயன்றனர். சிலர் கூத்தராகவும், சடைமுடியராகவும், இசைப்புலவர்களாகவும் உருவம் தாங்கித் தப்பியோட முயன்றனர். அவர்களைப் பிடித்துவந்து சிறைப்படுத்தினான்.

பெருமங்கலம்

அரசனுடைய பிறந்த நாளை மக்கள் சிறப்பாகக் கொண்டாடினர். இதனைப் பெருநாள் எனவும் பெருமங்கலம் எனவும் கூறுவர். அன்று மக்கள் தூய ஆடைகளை உடுத்து அரசனை வாழ்த்தினர்; அன்று ஓய்வு எடுத்துக் கொண்டனர். வடநாட்டு வெற்றியுடன் செங்குட்டுவன் வஞ்சி நகரை அடைந்தான். அதனை அடுத்து அவன் பிறந்த நாளும் வந்தது. அப்பொழுது மருத நிலத்தில் உழுது நின்ற உழவன் தன் பகடுகளைப் பார்த்து, "பகடுகளே, பகைவர்களுடைய கோட்டைகளைக் கெடுத்து, அங்குக் கழுதையைக் கட்டி உழுது, வெள்வரகினை விதைத்த நம் உழவன் வந்தான். நாளை அவன் பிறந்த நாளும் வருகிறது. நாளை நீங்கள் நுகங்களைப் பூணவேண்டா. உழவுத் தொழிலின்றி நிற்பீர்," என்றான்.

சிறந்த நாட்கள்

சிறப்பான நாட்களில் சிறையில் அடைத்து வைத்தவர்களை யெல்லாம் விடுதலை செய்வது வழக்கம். மாடலன் என்னும் மறையவன் வேள்வி செய்யவேண்டியதைப் பற்றிக் கூறினன். வேள்வி செய்வதற்கு வேண்டியவற்றைச் செய்யுமாறு ஆணை யிட்டுக் கனகவிசயரையும் சிறைவீடு செய்தான். மற்றுமுள்ள ஆரியவரசர்களையும் விடுதலை செய் தான். விடுதலை பெற்ற இவர்கள் பத்தினி விழாவன்று விழாவிற் கலந்து, பத்தினியை வணங்கி வரம் பெற்றுத் தம் நாடு திரும்பினர். மேலும், சிறைக் கோட்டத்தைத் திறந்து மற்றச் சிறைவாசிகளையும் விட்டிடுமாறு கூறினன். திறை கொடுக்க வேண்டிய நாடுகள் திறை கொடுக்க வேண்டா என்று ஆணை பிறப்பித்தான்.

பெண்களும் அரசியலும்

முக்கியமான செய்திகளைப் பற்றிச் செங் குட்டுவன் தன் மனைவியாகிய வேண்மாளிடம் அபிப் பிராயம் கேட்டு வந்தான். சாத்தனுர் கூறிய கண்ணகி வரலாற்றைக் கேட்டபின்பு, "பாண்டிமா தேவியினும் கண்ணகியினும் யார் சிறந்தவர்?" என்று தன் மனைவியைக் கேட்டான். அவள் தன் நாடு நோக்கி வந்த கண்ணகியைப் போற்றுதல் வேண்டும் என்று கூறியதன் காரணமாகவே செங்

குட்டுவன் கண்ணகிக்குக் கோயிலெடுக்கும் எண்ணம் உடையவன் ஆனான்.

7. செங்குட்டுவன் குணநலன்

செங்கோலாட்சி

நாட்டின் தலைவன் செங்குட்டுவன். அவனிடத்தில் எல்லாவிதமான அதிகாரங்களும் இருந்தன. இருந்தாலும், நீதியில் தவறி ஆட்சி செலுத்துவதற்குச் செங்குட்டுவன் மிகவும் அஞ்சினான். சாதாரணமாக மக்கள் ஆணையிடுகின்றனர் ; வஞ்சினம் கூறுகின்றனர். எந்தப் பொருள்களை அவர்கள் மிகவும் சிறப்பாகக் கருதுகிறார்களோ அதன்மீது ஆணையிடுவர். கடவுள்மீது ஒருவன் ஆணையிட்டால், கடவுளையே அவன் மிகவும் சிறப்பாக மதிக்கிறான் என்று கூறலாம். ஆகையால் வஞ்சினம் கூறுவதிலிருந்து ஒருவன் தன் வாழ்க்கையில் மிகவுஞ் சிறப்பாகக் கருதக்கூடியது எது என்று அறிந்துவிடலாம். தமிழ் வேந்தர்களைப் பழித்த வட அரசர்கள் மீது செங்குட்டுவன் மிகுந்த சினம் கொண்டான். தமிழ் வேந்தர்களுக்கு நிகழ்ந்த இப்பழியைத் துடைப்பது தன் கடனெனஉணர்ந்தான். அரசவையில் நின்று, “கனகவிசயர் தலைமீது கல்லையேற்றி வரவில்லையாயின், பகைவர்களை வென்று மக்களைக் காப்பாற்றாத கொடுங்கோலன் என்று என்னை மக்கள்

தூற்றுவார்களாக,'' என்று அவன் கூறியதிலிருந்து செங்கோலாட்சியை அவன் எவ்வளவு சிறப்பாக மதித்தான் என்பது விளங்கும். அன்றியும், கோவலனைக் கள்வனெனக் கருதி, கொலைப்படுத்த நெடுஞ் செழியன் வரலாற்றைச் சாத்தனுர் கூறக் கேட்ட பொழுது, ''பாண்டியன் கொலை செய்தமையால் வளைந்தது அவன் செங்கோல் என்ற செய்தி எம் போன்ற அரசர் செவியிற் படுவதற்கு முன்பு அவன் இறந்தமையால், அது நிமிர்ந்தது,'' என்று கூறினன். நீதியில் தவறிய மன்னன் பெயரைக் கேட்கவும் நாணினன். நீதியில் தவறிய மன்னனை அவனைப்போன்ற பிற அரசர்கள் மதித்தல் இல்லை என்று கருதினன். அவ்வாறு தவறிழைத்தவன் அதனை உணர்ந்து வாழ்தலினும் சாதலே மேல் எனக் கருதினன்.

ஆண்மை

இவனிடம் காணப்படும் மற்ருெரு குணம் ஆண்மை. இவன் தான் ஆண்ட ஐம்பது ஆண்டு களிலும் போரிலே ஈடுபட்டிருந்தான். இளங்கோவடி களும் பரணரும் இவன் வீரச் செயல்களை நன்கு பாராட்டி யுள்ளார்கள். மாடலன் என்னும் மறையவன்,

''வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்

அறக்கள வேள்வி செய்யா தியாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை.''

எனச் செங்குட்டுவனைப் பற்றிக் கூறியுள்ளான். வட நாட்டாரிடத்தும் தன் ஆண்மையைக் காட்டி, இமயம் வரைப் படையெடுத்துச் சென்று வெற்றியுடன் மீண்டான். இவன் ஆண்மையையும் ஆற்றலையும் உணர்ந்தே நூற்றுவர்கன்னர் இவனுடன் நட்புரிமை பூண்டனர். பழையனுடைய மகளிரின் மயிரைக் கயிருகத் திரித்துக் காவன்மரத்திற் கட்டி இழுத்ததும், கனகவிசயர் தலைமீது கல் ஏற்றியதும் இவன் பெருங்குணத்திற்கு இழுக்கு எனக்கருதுவர் சிலர். தற்காலக் கண்கொண்டு பார்ப்பவர்களுக்கு அது இழுக்காய்த் தோன்றினும், அக்கால மன்னர் தோல்வியடைந்த மன்னர்களை இவ்வாறு நடத்துவது மரபாகவே இருந்தது என்பதை அறிவார் தவருகக் கருதமாட்டார்.

சமயப் பொது நோக்கு

செங்குட்டுவன் வாழ்ந்தது சங்க காலத்தை அடுத்த காலம். அக்காலத்தில் தமிழ் நாட்டில் நான்கு வேறுபட்ட சமயங்கள் நிலைத்திருந்தன. அவை சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்பவை. இம்மதங்கள் தமக்குள் போட்டி, பொருமை இன்றி வளர்ந்து வந்தன. ஒரு குடும்பத்தினர் பலரும் பல மதத்தைத் தழுவியிருந்தாலும் ஒற்றுமையாகவே வாழ்ந்தனர். சமய வேறுபாடு மன வேறுபாட்டிற்கு

இடங் கொடுக்கவில்லை. செங்குட்டுவன் சைவன். இவன் தம்பி இளங்கோவடிகள் சமணர் என்பர். செங் குட்டுவனோடு நெருங்கிப் பழகி, இவனால் ஆதரிக்கப் பெற்ற சாத்தனார் பௌத்தர். இவர்களெல்லாம் ஒற் றுமையாகவே வாழ்ந்தனர். புலவர்களிடையேயும் மத வேறுபாடு பாராட்டப்படவில்லை. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைச் சாத்தனார் தலைமையில் அரங் கேற்றினார். சாத்தனார் மணிமேகலையை இளங் கோவடிகள் தலைமையில் அரங்கேற்றினார். மதத்தின் காரணமாக ஒருவரை ஒருவர் வெறுக்கவில்லை. செங் குட்டுவன் சைவத்தில் மிகுந்த பற்றுடையவன். சிவ பெருமானுடைய கொடுகொட்டிக் கூத்தைக் கண்டு மகிழ்ந்தான். ஆனால் இவனுக்குச் சைவத்தில் இருந்த பற்றுப் பிற மதங்களை வெறுக்கத் தூண்ட வில்லை. வடநாட்டு யாத்திரைக்கு, காலையில் எழுந்து கடன்களை முடித்துத் தன் குலதெய்வமாகிய சிவபெரு மானுடைய அடிகளைத் தன் முடிமேல் தாங்கி வணங்கி யானைமீது புறப்பட்டான். அப்பொழுது ஆடகமாடத்துத் துயில் கொள்ளும் இறைவன் கோயில் அர்ச்சகர், அங்குள்ள பிரசாதத்தைக் கொண்டு அரசன் கையில் கொடுத்தனர். அரசன் அதனை மறுக்கவில்லை. அதனை வாங்கி, சிவபெருமான் திருவடிகளை முன்னரே தலைமேல் தாங்கியவனாகை யால், தன் மார்பின்மீது அணிந்துகொண்டான்.

கலையார்வம்

செங்குட்டுவன் ஒரு சிறந்த கலைஞனாக இருந்தமையின் கலைகள் பலவற்றையும் போற்றி வளர்த்தான். தமிழிற் சிறந்த அறிவும் பற்றும் உடையவனாதலின், முத்தமிழும் இவன் காலத்தில் சிறப்பாக வளர்ச்சியுற்றன. இதற்கு முத்தமிழ்க் காவியமாகிய சிலப்பதிகாரம் செங்குட்டுவன் காலத்து, இவன் தம்பி இளங்கோவடிகளால் செய்யப்பட்டமையே சிறந்த சான்றாகும்.

இலக்கியத்தில் இவனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்தில், பரணர் இவனைப்பற்றிப் பாடியுள்ளார். அவருடைய இலக்கிய அறிவைக் கண்டு மகிழ்ந்து உம்பற்காடு என்னுந் தன் நாட்டின் வருவாயையும், தன் மகனாகிய குட்டுவஞ் சேரலையும் அவருக்கே கொடுத்து மகிழ்ந்தான்.

இவன் சிறப்பாகக் கூத்தினை வளர்த்தான் என்பது தெரிய வருகிறது. இவன் வடநாடு சென்றபொழுது இவனுடன் சென்ற கூத்தரும் நடிகரும் கணக்கிலர். ஓய்வு நேரங்களிற் கூத்து ஆடக்கண்டு மகிழ்ந்தான். வஞ்சிக்கு மீண்ட செங்குட்டுவன் தன் மனைவியுடன் நிலாமுற்றத்து வீற்றிருந்தான். அப்பொழுது பறையூர் வாழும் கூத்தச் சாக்கையன் சிவபெருமான் திரிபுர மெரித்தபொழுது உமையம்மையை இடப்பக்கத்தே கொண்டு ஆடிய கொட்டிச் சேதம் என்னும் கூத்

தினை ஆடினான். சிவந்த அடிகளிலுள்ள தண்டை ஒலிக்கவும், சிவந்த கையிலுள்ள பறை முழங்கவும், கண்கள் ஆயிரம் ஆயிரம் குறிப்பினைக் காட்டவும், சிவந்த சடை பரந்து திசைகளில் பரவவும், பாடகம் அசையாது, தோள்வளை நடுங்காது, மேகலை ஒலியாது, நீண்ட குழை அசையாது, கூந்தல் அவிழாது உமையை இடப்பக்கத்தே கொண்டு ஆடிய கூத்தைக் கண்டு, மட்டற்ற மகிழ்ச்சியடைந்த செங்குட்டுவன் அவனைப் பெருமைப்படுத்தி அனுப்பினன்.

கொடை

தன்னை அடுத்தவருக்குப் பொன்னையும் மணியையும் கொடுத்துக் காக்கும் தன்மை இவனிடம் மிகுதியாக இருந்தது. பரணருக்கு இவன் கொடுத்த பொருளை முன்பே கண்டோம். மாடலன் என்னும் மறையவனுக்குத் தன் நிறையளவு பொன்னைப் பரிசிலாகக் கொடுத்தான். நீலகிரியில் அரசன் தங்கிய பொழுது கருநாடர் தங்கள் பெண்களுடன் வசந்த காலத்தைப் பாடிக் கொண்டும், குடகு நாட்டவர் தம் பெண்களுடன் கார் காலத்தைப் பாடிக் கொண்டும் அரசனை வாழ்த்தி நின்றனர். அவர்களுக்கு அவர்கள் சிறிதும் 'எதிர்பாராத வண்ணம் சிறந்த அணிகலன்களைப் பரிசிலாக அளித்தான். வடநாட்டுப் போர் முடிந்ததும் அப்போரில் இறந்தவர்களின் மக்களுக்குப் பொன்னாலாகிய வாகைப் பூக்களை அளித்தான்.

சிறந்தவரை வழிபடுதல்

சங்க இலக்கியங்கள் போரில் மடிந்த வீரர்களுக்கு நடுகல் நடுவதைப் பற்றிக் கூறுகின்றன. ஆனால் கற்பில் சிறந்தவர்களுக்கு நடுகல் நட்டுக் கோயி லெடுத்து வழிபட்டதைச் செங்குட்டுவன் காலத்தில் தான் முதன்முதலாகக் கேள்விப்படுகிறோம். இவன் காலத்திற்குப் பின்புதான் பத்தினியைக் கடவுளாக வழிபடும் பழக்கம் தமிழ் நாட்டில் புகுந்ததுபோலும். இவனைப் பின்பற்றிக் கொங்கிளங்கோசரும், சோழ பாண்டியரும், இலங்கை வேந்தன் கயவாகுவும் தங் கள் நாட்டிலேயும் கண்ணகிக்குக் கோயிலெடுத்து வழி பட்டனர். இப்பத்தினி வணக்கமே பிற்காலத்தில் பக வதி அல்லது துர்க்காதேவி வணக்கமாகவும், திரௌ பதியம்மன் வணக்கமாகவும் தமிழ் நாட்டிற் பரவிற்று என்று சிற்சில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

மக்கள் அரசனிடம் கொண்ட அன்பு

இவ்வளவு சிறந்த குணங்களையுடைய பெரும் வீர னாக இருந்தமையால் இவனை இவன் நாட்டு மக்கள் பெரிதும் விரும்பினர். இவன் வடநாட்டுக்குச் சென்ற தனால் விளைந்த பிரிவால் வருந்தியிருந்த மக்கள் இவன் வருகையைக் கேட்டதும் மனம் பூரிப்படைந் தனர். அரசன் வருகையை அறிந்த பணிப்பெண்கள் அதனைக் கோப்பெருந் தேவிக்கு அறிவித்து மகிழ்ந் தனர். குறிஞ்சி நிலத்தில், பரண்களின்மீது இருந்த

பெண்கள், " வடதிசைச் சென்று வாகை சூடிய நம் மன்னனுடைய போர்க் களிறுகள் வரும்வழி சுருங்கு வதாக," என்று பாடினர். மருத நிலத்தில், வயல்களை உழுதுநின்ற உழவர், " பகடுகளே ! பகைவர் நிலத் தில் கழுதையேர் கட்டி உழுத நம் மன்னன் வரு கிறான். நாளை அவன் பிறந்த நாள். நீங்கள் ஒய்வு பெறுங்கள்," என்று வாழ்த்தினர். முல்லை நிலத்தில், பசுக்களை மேய்த்து நின்ற கோவலர் தாழைக் கொம் பில் இருந்துகொண்டு, " ஆனிரைகளே, வில்லவன் கொண்டுவருகின்ற பசுக்கூட்டங்களோடு நாளை நீங் கள் மகிழ்ந்து விளையாடுவீராக !" என்று தம் குழல் ஊதி ஆர்ப்பரித்தனர். நெய்தல் நிலத்தில், வலம்புரிச் சங்கு ஈன்ற வெண்முத்தைக் கழங்காகக் கொண்டு ஆடும் மகளிர், " நெடுநாள் பிரிந்திருந்த நம் மன் னன் நம்மரசியோடு கூடி மகிழுமாறு நாளை வரு கிறான். அவன் சூடிய பனம் பூவையும், தும்பையை யும், வஞ்சியையும் நாம் புகழ்ந்து பாடுவோமாக !" என்று பாடி மகிழ்ந்தனர். இவ்வாறு நானில மக்களும் இவன் வருகையை ஆவலுடன் எதிர் நோக்கி நிற்க, அவர்களுடைய உள்ளம் மலரும்படி அரசன் வஞ்சிமா நகருள் நுழைந்தான். மக்களின் அன்பிற்கு இத் துணை உரியவனாகிய மன்னன் ஐம்பது ஆண்டுகள் நாட்டை அமைதியாக ஆண்டதில் வியப்பு ஒன்றும் இல்லை.

II. முதல் இராசராசன்

1. இராசராசன் முன்னோர்

கடைச்சங்க காலம் வரையிலும் சோழநாட்டை ஆண்ட அரசர் பலரைப் பற்றிச் செய்திகள் கிடைத்திருக்கின்றன. ஆனால் கடைச்சங்க காலத்திற்குப் பிறகு கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலும் சோழ மன்னர் வரலாற்றைப் பற்றித் தெளிவாக ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. களப்பிரர் என்பவருடைய ஆட்சி சில ஆண்டுகள் தமிழ் நாட்டில் நடைபெற்றது. அதன் பின்பு, பாண்டியர்களும் பல்லவர்களும் சோழ நாட்டை வென்று ஆண்டு வந்தனர். இவ்விரு அரசும் தளர்ச்சியடைந்த பின்பு சோழர் அரசு மீண்டும் தழைக்கலாயிற்று. இவ்விடைக் காலத்தில் சோழர் குடும்பம் பலகிளைகளாகப் பிரிந்து சோழ நாட்டிற் பல விடங்களிலும் இருந்தது. அத்தகைய குடும்பங்களில் ஒன்றே தஞ்சாவூரில் தன்னரசியலைக் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் நிறுவியது.

விசயாலயன் என்பவன் தஞ்சாவூரை வென்று, கோட்டை கட்டி, அதனைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 850 முதல் ஆளத் தலைப்பட்டான். அக்காலத்துத் தஞ்சாவூர்ப் பகுதியை ஆண்ட முத்தரையர் என்பவர்களிடமிருந்தே இவன் தஞ்சாவூரை

வென்றிருக்க வேண்டும். இப் போரில் இவன் உடம்பிற் பல காயம் பட்டமையால் இவனைத் தொண்ணூற்றுறு புண் கொண்ட சோழன் எனக்கூறுவர்.

இவனுக்குப் பின் இவன் மகன் ஆதித்த சோழன் கி. பி. 871-முதல் ஆண்டான். இவன் ஆட்சியில் முக்கியமான நிகழ்ச்சி திருப்புறம்பயப் போர். இவ்வூர் கும்பகோணத்தை அடுத்து இருக்கிறது. பாண்டியன் வரகுணன், பல்லவர் சோழர் கங்கர் ஆகிய மூவரையும் இவ்விடத்தில் எதிர்த்துத் தோல்வியுற்றுன். இப் போருக்குப்பின் சோழ மண்டலத்தை ஆதித்தனே ஆளும்படி பல்லவன் விட்டுவிட்டான். தென்னிந்திய வரலாற்றில் இப்போர் மிகவும் முக்கியமானது. இதனுல் சோழ இராச்சியம் நிலை நாட்டப்பட்டது. பல்லவரும் பாண்டியரும் வலி இழந்தனர்.

முதற் பராந்தகன், ஆதித்தனுக்குப் பின்பு பட்டம் பெற்றுன். இவன் அக்காலப் பாண்டியனையும், ஈழத்தையும் வென்றுன். இவன் சிதம்பரம் பொன்னம்பலத்தைப் பொன் வேய்ந்தான். காட்டுமன்னுர் குடிக்கருகில் தன் பெயரால் வீரநாரண ஏரி என்ற ஓர் ஏரியை வெட்டினுன். இவன் இறுதிநாட்களில் இராட்டிரக்கூட அரசன் மூன்றும் கிருஷ்ணன் தொண்டைமண்டலத்தைப் பராந்தகனிடமிருந்து வென்று கொண்டான்.

முதற் பராந்தகனுடைய மகன் கண்டராதித்தன், ஒரு சிறந்த சிவபக்தன். தில்லைச் சிவபெருமான் மீது திருவிசைப்பா பாடி இருக்கிறான். பத்துப் பாக்களைக் கொண்ட இது ஒன்பதாம் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளது.

கண்டராதித்தன் தம்பி அரிஞ்சயன் ஆண்ட பின்பு இரண்டாம் பராந்தகன் பட்டம் ஏற்றான். இவனைச் சுந்தர சோழன் எனவும் கூறுவர். தன் காலத்திருந்த பாண்டியனைப் போரிற் கொன்று பாண்டிய நாட்டைச் சோழ இராச்சியத்தோடு இணைத்தான். இராட்டிரக்கூடர்களிடமிருந்து தொண்டைமண்டலத்தை வென்றான். இவன் மனைவியர் வானவன்மா தேவி, சேரன்மா தேவி என்னும் இருவர். வானவன்மா தேவியாருக்கு ஆதித்த கரிகாலன், அருண்மொழித்தேவர், குந்தவை என்று மூன்று மக்கள் இருந்தனர்.

இப்பராந்தகனுக்குப் பின்பு சில ஆண்டுகள் கண்டராதித்தனுடைய மகன் உத்தமசோழன் அரசாண்டான். இவனுக்குப் பின் இராசராசன் கி. பி. 982-ல் அரசு கட்டில் ஏறினான்.

2. இராசராசன் (985—1014)

இரண்டாம் பராந்தக சோழனுக்கு அவன் பட்டத்தரசி வானவன்மா தேவி வயிற்றில் உதித்தவன்

இராசராசன். இவன் இராசகேசரி என்ற பட்டம் தரித்துக் கி. பி. 985-ல் அரசு கட்டிலேறினான். இராட்டிரக்கூடர் பிடியிலிருந்து தன்னை விடு வித்துக் கொண்டு மேலே கிளம்பிய சோழ நாட்டிற்கு இராசராசன் அரசனானான். விசயாலயன் மரபில் வந்த சோழ மன்னர்களில் இவனே பெரியவன். அரசு கட்டில் ஏறுவதற்கு முன் தன் தந்தையிடமும் சிறிய தந்தையிடமும் அரசியல் அனுபவம் நிரம்பப் பெற்றிருந்தான். இவன் ஆண்ட முப்பது ஆண்டு களில், சோழர் அரசியல் இனிவரும் இருநூறு ஆண்டுகள் வரை ஆட்டமில்லாது நிலை பெற்று நிற்குமாறு அடிப்படை கோலினான். தன் மகன் இராசேந்திரனையும் தன்னைப் போலவே பெரும் வீரனாக வளர்த்து வந்தான். வடக்கே கிருஷ்ணையாறு முதல் தெற்கே ஈழம் வரை இராசராசனின் நாடு பரவியிருந்தது. இவ்வளவு பெரிய நாட்டை எத் தகைய குழப்பமுமின்றி ஆளுவதற்கு இவன் கைக் கொண்ட அரசியல்முறை இக்காலத்தவரும் கண்டு வியக்கத் தக்கது. இராசராசன் போரிற் பகைவரைப் புறங்கண்டு நாட்டைப் பெரிதாக்குவதோடு நின்று விடவில்லை. இலக்கியம், இசை, நாடகம், நடனம், சிற்பம், ஓவியம், சைவம் எல்லாம் இவன் காலத்து வளர்ச்சி அடைந்தன.

பிறந்த நாள்

இவன் சதயநாளிற் பிறந்தவன் என்பது திங்கள் தோறும் சதயநாளில் திருவிழா கொண்டாடுவதற்கு அனேகம் கோயில்களுக்கு நிவந்தங்கள் கொடுத் திருப்பதிலிருந்து தெரிய வருகிறது. கலிங்கத்துப் பரணியும் "சதய நாள் விழா உதியர்மண்டலந் தன்னில் வைத்தவன்," என்று கூறுகிறது. மலையாள நாட்டிலுள்ள முட்டம் என்னும் ஊருக்கு 'மும்முடிச் சோழநல்லூர்' என்று பெயர் கொடுத்து, அதனை அங்குள்ள திருநந்திக் கரையிலுள்ள கோயிலுக்கு இறையிலியாகக் கொடுத்துத் தான் பிறந்த நாளாகிய ஐப்பசிச் சதய நாளில் விழாக் கொண்டாட ஏற்பாடு செய்தான் என்று அங்குள்ள கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இதனாலும், இவன் ஐப்பசித் திங்கள் சதய நாளிற் பிறந்தவன் என்பது புலப்படுகிறது. இவன் பிறந்ததால் ஆதிசேடன் மனைவியர், "இனி நம் கணவனுக்கு உரிய நிலப் பொறை குறைந்தது," என்று மகிழ்ந்தனர் என உபசாரமாகச் சொல்லப்படுவது உண்டு.

இராசராசன்

இளமையில் இவனுடைய பெற்றோர்கள் இவனுக்குக் கொடுத்த பெயர் அருண்மொழி வர்மன் என்பது. இவன் அரசு ஏற்ற மூன்றும் ஆண்டில் சேரனையும் பாண்டியனையும் காந்தளூர் என்ற இடத்தில்

வென்றான். அவ்விரண்டு அரசர்களுடைய முடியை யும் கைப்பற்றிக்கொண்டு மும்முடிச்சோழன் என்று பெயர் புனைந்தான். அது முதல் மன்னர்மன்னன் என்னும் பொருள்படும் இராசராசன் என்ற பெயரை யும் தரித்துக்கொண்டான். இப்பெயரே இவனுக்கு என்றும் நிலைப்பதாயிற்று.

மெய்க்கீர்த்தி

இராசராசனுக்கு முன்பு தமிழ் நாட்டை ஆண்ட பாண்டியர், பல்லவர், சோழர் ஆகியோர் நிலம் முதலியவற்றை இறையிலியாக வழங்கும்பொழுது அவற்றைச் செப்பேடுகளில் எழுதி உரியவர் கையில் கொடுத்தனர். அச்செப்பேடுகளில் முதலில் தம் முன்னோர் வரலாற்றைக் கூறி, பின் அதன் நோக்கத் தைக் குறிப்பிட்டனர். இராசராசனுக்கு முன்பு ஆண்ட உத்தமசோழன் காலம் வரையிலும் இந்த முறையையே பின்பற்றி வந்தனர். இராசராசன் தன்னுடைய வெற்றியை விளக்கும் 'மெய்க்கீர்த்தி' யைக் கல்வெட்டுக்களில் முதலில் எழுதினான். இது அகவற்பாவால் அமைந்தது. இராசராசனால் கொண்டு வரப்பட்ட இம்முறையை இவனுக்குப் பின்பு வந்த சோழர்கள் பின்பற்றினர்.

மெய்க்கீர்த்தியில் அரசனுடைய வெற்றிகள் கால முறைப்படி கூறப்பட்டிருக்கும். இதனால், அரசன் ஆண்ட ஆண்டு பெருகப் பெருக, மெய்க்கீர்த்தியும்

வளர்ந்துகொண்டே செல்லும். இதனால், கால முறைப்படி வெற்றிகளை அறிந்துகொள்வதற்கு இது மிகவும் துணை புரிந்தது.

அன்றியும், ஒவ்வோர் அரசனுடைய மெய்க் கீர்த்தியும் ஒவ்வொரு மங்கல மொழியால் ஆரம்ப மாகும். சில அரசர்கள் ஒன்றற்கு மேற்பட்ட மங்கல மொழிகளையும் வைத்திருந்தனர். இது வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் துணை புரிந்தது. அரசன் பெயர் இல்லாத கல்வெட்டுக்களை மங்கல மொழிகளைக் கொண்டு இந்த அரசனுடையன என்று எளிதில் அறிந்து கொள்ளலாம். இராசராசனுடைய மெய்க்கீர்த்திகள் 'திருமகள்போலப் பெருநிலச் செல்வியும்' என்று ஆரம்பமாகும்.

3. வென்றிச் சிறப்பு

சேர பாண்டியர் போர்

இராசராசன் காலத்தில் சேர நாட்டை ஆண்ட வன் பாஸ்கர ரவிவர்மன் என்பவன். இவன் இராச ராசன் அனுப்பிய தூதனை இழிவாக நடத்திச் சிறை செய்தான். இதுவே சேரநாட்டுடன் போர்நிகழ்ந்த தற்குக் காரணமாக ஒட்டக்கூத்தர் கூறுகிறார். அத்தூதுவனை உதகை என்ற இடத்தில் சிறை செய் திருந்தான். இதனை அறிந்த இராசராசன் பெரும் படையுடன் புறப்பட்டான். அக்காலத்துப் பாண்டிய

நாட்டை ஆண்ட அமரபுயங்கன் சேரனுடைய நண்பன். இவன் சேரநாட்டிற்குப் போகும் வழியில் இராசராசனை, எதிர்த்துத் தோல்வியுற்றான். காந்தளூர்ச்சாலை என்னும் இடத்தில் சேரனுக்கும் சோழனுக்கும் பெரும்போர் நடந்தது. அங்கிருந்த சேரன் கப்பற்படையை இராசராசன் அழித்துச் சேரனைப் புறங்கண்டான். இக்காந்தளூர், திருவிதாங்கூரின் தலைநகரமாகிய திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாகும். அது இப்பொழுது வலியசாலை என்று அழைக்கப்படுகிறது. இப்போரின் பின்பு திருவிதாங்கூரின் தெற்குப் பகுதியில் உள்ள உதகையைத் தாக்கித் தன் தூதுவனை விடுதலை செய்தான். பின்பு தெற்குக் கடற்கரைக் கோடியிலுள்ள விழிஞம் என்னும் இடத்திலும் பெரும்போர் நிகழ்ந்தது. இதிலும் சேரன் தோற்றோடினான். இவ்வாறு வெற்றி மேல் வெற்றி பெற்று அந்நாட்டில் தங்கியிருந்த பொழுது சதயநாள் வர, அவ்விழாவை அந்நாட்டில் ஆண்டுதோறும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தான்.

இக்காந்தளூர்ப் போர் கி. பி. 988-ல் நடைபெற்றிருக்கவேண்டும். இவன் ஆட்சியின் நான்காம் ஆண்டின் ஆரம்பத்தில் இப்போரைப்பற்றிக் "காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தருளி" என்று குறிப்பிடுகிறான். இச்சொற்றொடருக்குக் காந்தளூர் என்னும் அறச்சாலையில் இத்தனை பேர் உண்ணலாம் என்று

உண்கலத்தை வரையறுத்தான் இராசராசன் என்று பொருள் கூறுவாறும் உளர்.

கொல்லம்

சேரநாட்டுப் போர் நடந்த சில ஆண்டுகளுக்குப் பின்பு இவன் திக்குவிசயம் ஆரம்பித்தான். அக்காலே, பாண்டிய நாட்டை முதல் முதலாக வென்றான். வென்ற பின்பு சேரநாட்டில் முதற்போரிற் கைப்பற்றாது விட்டு வந்த கொல்லத்தை நோக்கித் தன் படைகளைச் செலுத்தினான். கொல்லம் தற் பொழுது திருவிதாங்கூரின் ஒரு சிறந்த நகரமாக இருக்கிறது. அக்காலத்து இதுவும் ஒரு சிறு நாடாக இருந்தது. அவன் கொல்லத்தை வென்ற பின்பு கொடுங்கோளூரையும் வென்று 'கீர்த்தி பராக் கிரமன்' என்று பட்டமும் புனைந்தான்.

குடமலை நாடு

பின்பு சோழரது படை தற்பொழுது குடகு எனப்படும் குடமலை நாட்டைத் தாக்கிற்று. அதனை அப்பொழுது ஆண்டவன் மீனிசா என்பவன். இவன் சோழர் படையைப் 'பனசோகே' என்னும் இடத் தில் எதிர்த்தான். சோழரே வெற்றி பெற்றனர். எனி னும், இராசராசன் மீனிசாவினுடைய வீரத்தை மெச்சி, அவனுக்குச் 'க்ஷத்திரிய சிகாமணி' என்ற பட்டத்தோடு 'மாளவ்வி' என்னும் ஊரையும் கொடுத்தான்.

கங்கபாடி

கங்கபாடி என்பது கங்கர் ஆண்டுவந்த கங்க நாடாகும். மைசூரின் தென்பகுதியும் சேலம் ஜில்லாவின் வடபகுதியும் இதில் அடங்கும். இதன் தலைநகரம் 'தழைக்காடு' என்பது. இது குடகு நாட்டிற்குப் பக்கத்தில் இருப்பதால், அந்நாட்டை வென்ற இராசராசனுக்கு இதனையும் வெல்லுவது எளிதாயிற்று. கங்கபாடி சோழ மண்டலத்தோடு சேர்ந்தது.

நுளம்ப பாடி

மைசூரின் கீழ்ப்பகுதியும் பல்லாரி ஜில்லாவும் இதில் அடங்கும். பல்லவ மரபைச் சார்ந்த நுளம்பர் இதனை ஆண்டு வந்தனர். சோழன் நுளம்பர்களை வென்று அவர் நாட்டைத் தன் நாட்டுடன் இணைத்தான். இவனால் வென்றடக்கப்பட்ட நுளம்பர் இவன் ஆட்சியில் அலுவலாளர்களாக அமர்ந்தனர்.

தடிகை பாடி

இது மைசூர் ஜில்லாவாகும். இப்படையெடுப்பின் இறுதியில் இப்பகுதியும் சோழ நாட்டோடு சேர்க்கப்பட்டது. இராட்டிரக்கூடர் இப்பொழுது வலி இழந்து விட்டமையால் கங்கர் நுளம்பர் இவர்களை ஆதரித்துத் துணைபுரிவார் எவரும் இலர். இதனால், இராசராசன் இவர்களை வெல்லுவது எளிதாயிற்று.

இப்படைகளுக்குத் தலைமை தாங்கி இப்போர்களை நடத்தியவன் இராசராசனுடைய மைந்தன் இராசேந்

திரன் ஆவான். இவனை இராசராசன் கங்கமண்டலத்திற்கும் வேங்கி மண்டலத்திற்கும் மகாதண்டநாயகனாக அமர்த்தினான். இராசராசன் இவனுக்குப் 'பஞ்சவன் மாராயன்' என்ற பட்டமும் கொடுத்தான்.

ஈழம்

இராசராசன் வென்றடக்கிய நாடுகளுள் ஈழமும் ஒன்று. "இராமன் குரங்குகளின் துணைக்கொண்டு பாலம் கட்டி இலங்கை சென்று இராவணனைக் கொன்றான். ஆனால் இராசராசன் பாலம் கட்டாமல் கப்பல் மூலமாகப் படைகளை யனுப்பி இலங்கையை வென்றான். ஆகையால் இராமனைவிட இராசராசனே பெரியவன்." என்ற கருத்தைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. கி. பி. 981-ல் ஐந்தாம் மகிந்தன் என்பவன் இலங்கைக்கு அரசனானான். இவன் இராசராசனுக்குப் பகைவர்களாகிய சேரனுக்கும் பாண்டியனுக்குந் துணை புரிந்தான். அதனாலேதான் இராசராசன் ஈழநாட்டின்மீது படையெடுத்தான் போலும்! கி. பி. 991-ல் ஈழ நாட்டிற் குழப்பம் ஏற்பட்டது. மகிந்தன் அதனை அடக்கும் திறனின்றி, தென்கிழக்கில் உள்ள ரோகணத்திற் சென்று மறைந்து வாழ்ந்தான். அந்தச் சமயத்தில் இராசேந்திரன் தலைமையிற் சென்ற சோழர் படை ஈழத்தின் வட பகுதியைக் கைப்பற்றியது. அப்பகுதிக்கு இராசராசன் 'மும்முடிச் சோழமண்டலம்' என்று பெயர்

கொடுத்தான். மும்முடிச் சோழன் என்பது இராச ராசனது சிறப்புப் பெயர்களுள் ஒன்று.

நெடுங்காலமாக ஈழநாட்டின் தலைநகராக விளங்கியது அநுராதபுரம் என்பது. இதனைச் சோழர் அழித்தனர். அம்மண்டலத்தின் நடுவிலுள்ள பொல-நருவா என்பது தலைநகரம் ஆயிற்று. பிற்காலத்தில் முதல் விசயவாகு ஈழநாட்டிற்கு அரசன் ஆன பொழுது அனுராதபுரத்தில் முடிசூட்டிக்கொண்டான். ஆனால், பொலநருவாவையே தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான்.

பொலநருவாவில் இராசராசன் சிவபெருமானுக்கு அழகிய கற்றளி ஒன்றைக் கட்டினான். இதனைத் தன் தாயை நினைவு கூர்தற்பொருட்டு அவள் பெயரைக் கொடுத்து 'வானவன்மாதேவீச்சுரம்' என்றழைத்தான். இக்கோயில் இன்றும் தன் பழமையான அழகு குன்றாது நிற்கின்றது. இதனைக் காண்பவர்களுக்கெல்லாம் இது இராசராசனுடைய வெற்றியை எடுத்துக் கூறுகிறது. இராசராசன் தஞ்சாவூரிற் கட்டிய பெரிய கோயிலுக்கு ஈழநாட்டிற் சில ஊர்களை நிவந்தமாகக் கொடுத்தான். அன்றியும், சோணாட்டுத் தலைவன் ஒருவன் அங்கு இராசஇராசேச்சுரம்என்னும் பெயராற் சிவாலயம் ஒன்று கட்டி அதற்கு வழிபாட்டிற்கும் திருவிழாவிற்கும் நிலங்களை இறையிலியாகக் கொடுத்தான். இவ்வாறு சோழர் தங்கள் ஈழ

77789

வெற்றியை என்றும் மறந்துவிட முடியாதவாறு நிலை நாட்டினர்.

மேலைச் சாளுக்கியர்

இவர்களுடைய நிலப்பகுதி இரட்டபாடியாகும். இராசராசன் சாளுக்கியர் தலைவன் சத்யாஸ்ரயனுடன் போர்செய்து வெற்றி பெற்றான். இப்போரிலும் தலைமை தாங்கி நடத்தியவன் இராசேந்திரனே. சத்தியாஸ்ரயன் சோழர் படை தன் நாட்டில் கொள்ளை அடித்ததையும், தான் அதனைத் தெற்கே துரத்தியதையும் கூறுகிறான். ஆகையால், முதலில் வெற்றி பெற்ற சோழர் படை பின் திரும்ப வேண்டியதாயிற்று.

இவ்வெற்றிகளின் காரணமாகத் துங்கபத்திரை சோழ மண்டலத்தின் வடவெல்லையாய்த் திகழ்ந்தது. கங்கர் நாடும், நுளம்பர் நாடும், பெல்லாரி ஜில்லாவும் சோழ நாட்டோடு சேர்ந்தன. இங்கு இராசராசனுடைய கல்வெட்டுக்கள் காணப்படவில்லையாயினும், கங்கபாடி, வேங்கி மண்டலம் இவற்றிற்குத் தன் மகனை மகாதண்டநாயகனாக வைத்திருந்தான் என்பதால், இவன் நாடு பெல்லாரி வரையிலும் பரவியது என்பதை அறிகிறோம். மகாதண்டநாயகன் இருந்தமையால் மேலைச்சாளுக்கியரும் சோழ நாட்டின்மீது படை எடுக்கவில்லை.

வேங்கி நாடு

கோதாவரிக்கும் கிருஷ்ணுவுக்கும் இடைப்பட்ட நாடு வேங்கி நாடு அல்லது கீழைச் சாளுக்கிய நாடு எனப்படும். கீழைச் சாளுக்கியர் மேலைச் சாளுக்கியரின் தாயத்தார். இராசராசனுக்கும் மேலைச் சாளுக்கியருக்கும் நடந்த போரில் கீழைச் சாளுக்கியர் மேலைச் சாளுக்கியருக்கு உதவி புரிந்தனர். கீழைச் சாளுக்கியர் மரபில் இரண்டு கிளையினர் அவ்வரசியல் உரிமையைப்பற்றி நெடுநாளாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இப்பூசல் இராசராசன் காலத்து மிகவும் சீர்கேடான நிலையை அடைந்தது. இளைய மரபினர் மூத்த மரபினரை நாட்டை விட்டுத் துரத்தினர். மூத்த மரபைச் சார்ந்த சக்திவர்மன் இராசராசன் உதவியை நாடினன். இராசராசன் கி. பி. 999-ல் வேங்கி நாட்டை வென்று, சக்திவர்மனை அரசன் ஆக்கினன். சக்திவர்மனுக்குப் பின்பு அவன் தம்பி விமலாதித்தன் பட்டம் பெறுமாறு அவனுக்கு இளவரசுப் பட்டமும் சூட்டினன். தன் மகள் குந்தவையை விமலாதித்தனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். இம்முறையை இராசராசனுக்குப் பின் ஆண்டு வந்த சோழர்களும் பின்பற்றித் தம் பெண் மக்களை வேங்கி அரசர்களுக்கு மணஞ்செய்து கொடுத்தனர். இதனல், கீழைச் சாளுக்கியர் சோழர் களுக்கு நெருங்கிய உறவினராயினர். மேலைச்

சாளுக்கியரோடு இருந்த உறவு அறுபட்டு வந்தது. சக்திவர்மன் பன்னிரண்டு ஆண்டுகள் ஆண்ட பின்பு கி. பி. 1011-ல் இறந்தான். அவன் தம்பி விமலாதித்தன் அரசு கட்டில் ஏறினன். இராசராசன் வேங்கி நாட்டை வென்ருயினும், அதனைத் தன் ஆட்சியின் கீழ் வைத்துக் கொள்ளவில்லை. தன் பாதுகாப்பிற் கீழைச் சாளுக்கியரைச் சுதந்தரமாக ஆளச் செய்தான். இதனல் இராசராசனுக்குத் தன் நாட்டின் வடவெல்லையைப் பற்றிய அச்சம் நீங்கியது.

தெலுங்கச் சோழன்

தொண்டைநாட்டின் வடக்கே கிருஷ்ணு வட பெண்ணை ஆகிய இரு நதிகளுக்கும் இடைப்பட்ட பகுதி, சீட்புலிநாடு, பாகிநாடு என்று பெயர் பெறும். இதனைத் தெலுங்கச் சோழன் பீமன் ஆண்டு வந்தான். முதற் பராந்தகன் இப்பகுதியை இராட்டிரக்கூடர் படையெடுப்பின்போது இழந்தான். இதனைத் திரும்பவும் இராசராசன் கைப்பற்றினன். இப்போர் ஆரம்பமாவதற்கு முன்பே சக்திவர்மன் இராசராசன் உதவியை நாடி வந்து தஞ்சையில் தங்கினன். சக்திவர்மன் இப்போரில் பங்கெடுத்துப் பெரு வீரத்துடன் போர் புரிந்து, இராசராசனுடைய நன்மதிப்பைப் பெற்ருன். இப்போரைத் தலைமை தாங்கி நடத்தியவன் பரமன் மழபாடியன் மும்முடிச்சோழன்.

முந்நீர்ப் பழந்தீவு

கடைசியாக, இராசராசன் வென்றது முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம். இவை சேரநாட்டிற்குத் தென் மேற்கே அரபிக் கடலிலுள்ள மால் தீவுகள் ஆகும். இராசராசன் இத்தீவுகளின்மீது படையெடுத்துச் சென்றமைக்குக் காரணம் விளங்கவில்லை. ஒருவேளை, இப்பழந்தீவில் வாழ்ந்தவர்கள், இராசராசன் வென்றடக்கிய சேரநாட்டினருக்குத் துன்பம் செய்து வந்தனர் போலும்! இவ்வெற்றியாலும், ஈழ வெற்றியாலும், நாம் இராசராசனிடத்திற் பெரிய கப்பற்படை இருந்ததென்பதை அறிகிறோம்.

4. இராசராசேச்சுரம்

சமய நோக்கம்

இராசராசன் சைவ சமயத்தினன். இவன் 'சிவபாத சேகரன்' என்று சிறப்புப்பெயர் தரித்துக் கொண்டதும், தஞ்சையில் இராசராசேச்சுரம் என்னும் பெரியகோயில் எடுத்ததும், அதற்கு இவன் நிவந்தங்கள் விட்டதும் இவன் சைவப் பற்றை விளக்கும். இவன் இவ்வளவு சிவபக்தி மிக்கவனாகத் திகழக் காரணம், இளமையில் சிவபக்தியிற் சிறந்த செம்பியன்மாதேவியாலும், குந்தவையாலும் வளர்க்கப்பட்டமையே. இவ்வளவு சைவப் பற்று மிக்கவனாக இருப்பினும், பிற மதங்களை வெறுத்து ஒதுக்கியவன் அல்லன். புறச்சமய மக்களையும் கண்ணுங்கருத்து

மாய்க் காத்து வந்தான். கடாரத்தரசன் சூளாமணி வர்மன் நாகப்பட்டினத்திற் புத்தர் கோயில் ஒன்று கட்டுதற்கு இராசராசனைக் கேட்டபோது, இவன் அதற்கு உடன்பட்டான். சூளாமணிவர்மன் கட்டத் தொடங்கிய அக்கோயில், அவன் மகன் விசயதுங்க வர்மன் காலத்தில் முடிவடைந்தது. அதற்கென ஆனை மங்கலம் என்னும் ஊரை இராசராசன் அளித்தான். இவன் கட்டிய இராசஇராசேச்சுரத்தில் பிற மதப் படி மங்கள் இருக்கக் காணலாம். திருமாலுக்குப் பங்களூர் ஜில்லாவில் பெருங்கோயில் ஒன்று கட்டி, இவனும் இவன் தமக்கை குந்தவையும் அதற்கு நிவந்தங்கள் விட்டனர். இவற்றை நோக்கும்பொழுது இராசராசன் சமயப் பொதுநோக்கு உடையனாய் எல்லா மதத் தினரையும் ஆதரித்து வந்தான் என்பது புலனாகும்.

தஞ்சைத் தளிக்குளம்

தேவார ஆசிரியர்கள் காலத்தில் தஞ்சையில் தளிக்குளம் என்னும் கோயில் இருந்ததென்பதைத் 'தஞ்சைத் தளிக்குளத்தார்' என்னும் அப்பர் சொற்களால் அறிகிறோம். தளிக்குளம் சிறந்த வைப்புத் தலங்களுள் ஒன்றாக இருந்திருக்க வேண் டும். அத்தளிக்குளத்தின் பெருமையை உணர்ந்த இராசராசன், அதனைப் பெரிய கற்றளியாக எடுத்தான் என்று கூறுவர். அக்கோயிலுக்குத் தன் பெயரையே கொடுத்து இராசராசேச்சுரம் என்று வழங்கினான்.

கோயிலின் திருப்பணி

பிற்காலச் சோழரின் பெருமைக்கும், தமிழ் நாட்டின் கலை வளர்ச்சிக்கும், இராசராசனுடைய சைவப் பற்றுக்கும் ஓர் எடுத்துக் காட்டாக இருப்பது இக்கோயில். மற்றக் கோயில்களில் வாசற் கோபுரம் வானளாவி வளர்ந்து நிற்கும், கர்ப்பக் கிரகத்தின் மேலுள்ள ஸ்தூபி மிகவும் சிறிதாக இருக்கும். வாசல்மேல் நிற்கும் கோபுரம் கோயிலினுள்ளே இருக்கும் கடவுளின் பெருமையை மறைத்து விடுகிறது எனலாம். ஆனால், இராசராசன் கட்டிய இக்கோயிலில் வாசல்மேல் நிற்கும் கோபுரம் சிறியது. உள்ளறையில் இருக்கும் இராசராசேச்சுரமுடையாரின் பெருமையைப் போல, அவ்வறையின் மீதுள்ள ஸ்தூபியும் மற்றக் கோபுரங்களைவிட மிக உயர்ந்து நிற்கிறது.

இக்கோயில் திருப்பணியை இராசராசன் தனது ஆட்சியின் பத்தொன்பதாவது ஆண்டில் ஆரம்பித்தான்; இருபத்து மூன்றாவது ஆண்டில் அப்பணி பெரும்பாலும் முடிவடைந்தது. ஆகையால், சுமார் நான்கு ஆண்டுகள் இக்கோயிற்பணி நடைபெற்றிருக்கின்றது. இவனது ஆட்சி இருபத்தைந்தாம் ஆண்டு இருநூற்று எழுபந்தைந்தாம் நாளின் கல்வெட்டு ஒன்று, ஸ்தூபித்தறியில் வைப்பதற்குப் பொன் தகட்டால் பொதிந்த செப்புக்குடம் கொடுக்கப்

பட்ட செய்தியைக் கூறுவதால், அன்றுதான் திருப் பணி முடிவடைந்ததெனவும், அன்றுதான் கடவுண் மங்கலம் நடை பெற்றது எனவும் கொள்ளலாம்.

அமைப்பு

இக்கோயில் சிவகங்கைக் கோட்டையின் தென் பகுதியில் உள்ளது. இக்கோயிலின் முதற்கோபுர வாயிலாகிய திருத்தோரணவாயில் 'கேரளாந்தகன்' வாயில் என்னும் பெயருடையது. இரண்டாம் வாயிலாகிய திருமாளிகை வாயில் 'இராசராசன் வாயில்' என்னும் பெயருடையது. இவ்வாயிலைக் கடந்து உள்ளே சென்ருல் 800 அடி நீளமும் 400 அடி அகலமுமுள்ள ஒரு பரந்த பேரவை போன்ற வெளி தோன்றும். இதில் கருங்கல்லும் செங்கல்லும் பரப்பி இருக்கும். அவ்வெளியில் முன்னே இருக்கும் மேடையில் ஒரே கல்லால் ஆன நந்தி இருக்கிறது. அந்நந்தியின்மேல் அதனைப் பாதுகாக்கப் பிற்காலத்தவர் கட்டின 'நாயக்கர் மண்டபம்' தோன்றும். நந்திக்கு எதிரில் இறைவன் கோயில் விமானமும், நந்தியை அடுத்து அதன் வலப் பக்கத்தில் அம்மன் கோயிலும் இருக்கின்றன. உட்கோயில் இறையறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தாபன மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம் என்னும் ஆறு பகுதிகளை உடையது. கோயிலின் உள்வாயில் 'திரு

அணுக்கன் திருவாயில்' என்னும் பெயருடையது. கர்ப்பக் கிரகத்தை அடைய விமானத்தின் தெற்கிலும் வடக்கிலும் வாயில்கள் உண்டு. தெற்கு வாயிலின் பெயர் 'விக்ரமன் வாயில்' என்பது. இவ்வாயிலின் கிழக்கே திருமகள் வடிவமும், வடக்கு வாயிலின் கீழ்ப்பக்கத்தில் நாமகள் வடிவமும் இருக்கின்றன. திரு அணுக்கன் திருவாயிலுக்கு இரு பக்கமும் அமைந்த படிகளாலேயே கோயிலினுள் நுழைவது வழக்கம். இக்கோயில், மேடைமேல் கட்டப்பட்ட தாகையினுல், இது மாடக் கோயில் என்று பெயர் பெற்றது என்பர். இக்கோயிலில் ஏழு வாயில்கள் உள்ளன. இவைகளில் உள்ள பதினன்கு துவார பாலகருள் ஒவ்வொருவரும் பதினெட்டடி உயரமும், எட்டடி அகலமும் உள்ளவர். இக்கோயில் 793 அடி நீளமும், 393 அடி அகலமும் உடையது.

பெரிய நந்தி

இறைவனுக்கு எதிரில் உயர்ந்ததொரு மண்டபத்தில் இந்நந்தி இருக்கிறது. இந்தியாவிலுள்ள பெரிய நந்திகளுள் இஃது இரண்டாவது என்பர். இதன் உயரம் பன்னிரண்டடி; நீளம் பத்தொன்பதடி; அகலம் எட்டே காலடி. இதன் மண்டபத்தைப் பிற்கால நாயக்கர் கட்டினர். இந்நந்தி வளர்ந்து வந்ததைத் தடுக்க இதன் பின்புறத்தில் ஓர் ஆணி அறையப்பட்டதாகக் கதை வழங்கும்.

சிவலிங்கம்

இக்கோயிலிலுள்ள சிவலிங்கம் மிகவும் பெரிது. கடவுண் மங்கலம் நடந்ததைப் பற்றிக் கதையொன்று கூறுவர். ஆதி சைவரைக்கொண்டு மருந்து சாத்திப் பந்தனம் செய்வித்தபொழுது, ஆவுடையார் வடிவம் மிகவும் பெரிதாக இருந்ததாகையால், மருந்து இளகிப் பந்தனமாகவில்லை. இதனைக்கண்ட அரசன் மிகவும் வருந்தினன். அது பொழுது விண்ணில் 'கருவூர்த் தேவர் இதனைச் செய்து முடிப்பர்' என்ற ஒலி தோன்றியது. கருவூர்த்தேவர் யார் எனத் தெரியாது அரசன் விழித்தான். அங்கிருந்த போக நாதர் என்னும் யோகியார் கருவூர்த் தேவரைப் பொதிகை மலையினின்றும் வரவழைத்தார். யோகியார் அவரை அழைத்ததன் நோக்கத்தைக் கூற, கருவூர்த் தேவர் தம் வாயில் இருந்த தம்பலத்தையே மருந்தாகக் கொண்டு சிவலிங்கத்தை ஆவுடையாரில் சேர்க்க, அஃது இறுகப் பிடித்துக்கொண்டது. இவ்வாறு பந்தனமானதைக் கண்டு அனைவரும் வியந்தனர். இக்கருவூர்த்தேவர் இவ்விறைவன்மீது பதிகம் பாடி யுள்ளார். அது ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப் பட்டுள்ளது. கருவூர்த்தேவர் இக்கோயிலிலேயே சமாதி பெற்றனர். மேலைத் திருச்சுற்றில் கிழக்கு நோக்கிய மேடையே இவர் சமாதி. பிற்காலத்தார் அதில் இவர் உருவம் செய்து வைத்துக் கோயில் கட்டி வணங்கினர்.

தக்கண மேரு விமானம்

இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் தக்கண மேரு விடங்கர். இவ்விறைவன் எழுந்தருளியுள்ள அறையின்மீது கட்டப்பட்ட விமானத்தின் பெயர் ‘ தக்கண மேரு விமானம் ’ என்பது. இவ் விமானம், பார்ப்பவர்களுக்கு ஒரு தேரைப் போன்ற தோற்றம் அளிக்கிறது. இவ்விமானம் 216 அடி உயரம் உள்ளது ; சதுரமாக அமைந்தது. பதின் மூன்று கோபுர மாடிகள் கொண்டது. உச்சியில் சதுர வடிவமான 80 டன் நிறையுள்ள ஒரே கல் தளமாக இடப்பட்டுள்ளது. இக்கல்லைத் தஞ்சைக்கு நான்கு கல் தொலையிலுள்ள சாரப்பள்ளம் என்ற ஊரிலிருந்து சாரம் போட்டு மேலே கொண்டு வந்தனர் என்பர். இக்கல்லின்மேல் கலசம் இருக்கிறது. இது செம்பினால் ஆயது. 3083 பலம் நிறையுடையது ; மேலே பொற்றகட்டால் பொதியப் பெற்றது. இக்கலசத்தின் மேலே இருப்பது ஸ்தூபி. இதுவும் செம்பினால் செய்யப்பட்டுப் பொற்றகட்டால் பொதியப் பெற்றதாகும். சதுரக்கல்லின் நான்கு மூலைகளிலும் இரண்டிரண்டு நந்திகள் உள்ளன. இத் தளக்கல்லைப் பற்றி ஒரு கதை சொல்லப்படுகிறது. கோயிலில் வேலை செய்துவந்த சிற்பிகளுக்கு உணவு நீர் முதலியவை கொடுத்துதவிய ஆயர் குலப்பெண் ஒருத்தியின் வீட்டிற்கிடந்த கல்லை அவளை நினைத்தற்

பொருட்டுச் சிற்பிகள் எங்கிருந்து கிடைத்ததென அரசனுக்குத் தெரிவிக்காமல் அங்கே இட்டனர் எனவும், அப்பெண் அக்கல்லைக் கொடுத்துதவியதாகவும், அச்செய்கையை வியந்து இராசராசன் அவள் ஊரில் கோயில் கட்டிக் கொடுத்ததாகவும், அதுவே தற்பொழுதுள்ள தாராசுரம் என்பதாகவும் கதை கூறுவர். இவ்விமானத்திற் பல விதமான சிற்பங்கள் காணப்படுகின்றன.

திருச்சுற்று மாளிகை

இராசராசன் ஆணை இட 'மும்முடிச்சோழப் பிரமராயன்' என்னும் சேனபதி இதனைக் கட்டி முடித்தான். இதன் எட்டுப் பக்கத்தினும் எட்டுத் திக்குப் பாலகர் கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கின்றனர். ஒவ்வொரு கோயிலுக்கும் பொன் தகட்டாற் பொதிந்த செப்புக் குடங்கள் கொடுக்கப்பட்டனவாம். ஆனல், இன்று இருப்பவை கற்குடங்களே.

கோயில் கண்காணிப்பாளர்

சிவாலயத்துள்ள சொத்துக்களைக் கண்காணிக்கும் முக்கிய அலுவலாளர் சண்டேசுரர். கோயிலில் உள்ள வரவு செலவு, விற்பது வாங்குவது எல்லாம் இவர் பெயராலேயே நடைபெற வேண்டும். முற்காலத்து இறைவன் சந்நிதியை அடுத்துச் சண்டேசுரர் ஒருவருக்கே முதற் பிரகாரத்தில் கோயில் எடுக்கப்படும். அம்முறையே இராசராசனும் சண்டே

சுரருக்குக் கோயில் எடுத்துக் கோயிலிலுள்ள கணக்குகளையெல்லாம் அவர் பெயராலேயே நடை பெறச் செய்தான். பிற்காலத்து இக்கோயில் சிதை வுற்ற பின்பு நாயக்க அரசர்கள் கோயிலைச் செப் பனிட்டபொழுது மற்றக் கடவுளர்க்கும் முதற் பிர காரத்திலேயே கோயில் கட்டினர். இன்றும், சிவன் கோயில்கள் எல்லாவற்றிலும் இச்சண்டேசுரர் சந் நிதியைக் காணலாம். சிவனை வழிபட்டு வெளிவரு வோர் இச்சண்டேசுரர் முன் சென்று கையை விரித் துக்காட்டி, தாம் கோயிற் சொத்து ஒன்றையும் திருடிச் செல்லவில்லை என்று அவருக்கு அறிவித்த பின்னரே வெளியே வரலாம். இதனை அறியாது சிலர் இப்பொழுது செவிட்டுச் சாமி என்று கூறி, அவர் முன் சென்று, கைதட்டி வணங்கி வெளியே வருவர்.

பிற கோயில்கள்

உமாபரமேச்சுவரி என்ற அம்மன் கோயிலும் இவ்வாலயத்திற்கு வடக்கே சிவகங்கைத் தோட்டத் தில் இருந்தது. அது பிற்காலத்து இடிக்கப்பட்டது. பிற்காலத்தில் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர் தற்பொழுதுள்ள அம்மன் கோயிலைக் கட்டினர். கோயிற் பிரகாரங்களிலுள்ள நடராசப்பெருமான் கோயிலும், கணபதி கோயிலும், சிற்பவேலைகள் நிறைந்த ஆறுமுகப் பெருமான் கோயிலும் பிற் காலத்தில் கட்டப்பட்டவை.

கோயிற் பணியாளர்

கோயில் காரியத்தைப் பார்ப்பவர்களுக்கு 'ஸ்ரீ காரியம் பார்ப்பவர்' அல்லது 'ஸ்ரீ காரியக்காரர்' என்பது பெயர். தஞ்சைப் பெரியகோயிலில் அரசன் ஆணைப்படி ஸ்ரீ காரியம் பார்த்து வந்தவன் பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான். இவன் சிவபெருமானிடத்து மிகுந்த பக்தியுடையவன். தஞ்சைக் கோயிலில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர், பரவையார், மெய்ப்பொருள் நாயனார் முதலியோருக்குச் செப்புப் படிமங்கள் எழுந் தருளுவித்து, அவற்றிற்கு வேண்டிய அணிகலன்களும் கொடுத்தான். இராசராசனுக்கும், உலகமாதேவிக்கும் படிமங்கள் எழுந் தருளுவித்து, அணிகளும் கொடுத்திருப்பது, இவனுக்குத் தன் அரசனிடத்தில் இருந்த பக்தியை நன்கு விளக்கும். ஸ்ரீ காரியக்காரரைக் கண்காணிப்பவர், 'ஸ்ரீ காரியக் கண்காணி நாயகம்' எனப்படுவர். இராசராசேச்சுரத்தில் ஸ்ரீ காரியக் கண்காணி நாயகமாக இருந்தவன் இராசராச மண்டலத்துத் திருக்கானப்பேர்க் கூற்றத்துப் பாளூர்க்கிழவன் அரவணையான் மாலரி கேசவன் என்பவன். கோயில் அர்ச்சகர் 'சிவாசாரியன் பவனபிடாரன்' என்பவர். இவர்களைத் தவிர, இறைவன் திருமுன் தேவாரப் பதிகம் பாடுதற்கு நாற்பத்தெட்டுப்பேரும், உடுக்கை

வாசிக்க ஒருவனும், கொட்டி மத்தளம் வாசிக்க ஒருவனும் ஆக ஐம்பது பேர் இருந்தனர். கோயிற் பணிகளைச் செவ்வனே செய்து வருதற்கு நானூறு தேவரடியார்களைக் கொண்டு வந்து அரசன் கோயிற் பக்கத்தில் குடியேற்றினன். இவர்களுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலி நிலம் கொடுத்தான். இவர்களுட்பாடுவோர் 'காந்தர்விகள்' எனவும், பாடம் கற்பித்தவர் 'காந்தர்வர்' எனவும் பெயர் பெற்றனர். மேலும் கொட்டி மத்தளக்காரரர், பக்க வாத்தியக்காரரர், வீணை வாசிப்பவர், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரை, சங்கு முதலிய இசைக்கருவி முழக்குவோர், பண்டாரிகள், கணக்கர், மெய்க்காப்பார், திருவிளக்கெடுப்பார், திருப்பள்ளித் தொங்கல் பிடிப்பவர், வண்ண மிடுபவர், சோதிடர், தச்சர், தட்டார், குயவர், கன்னர் முதலிய பல பணியாளர்கள் இருந்தனர். பெரிய கோயிலின் பண்டாரத்தின் பெயர் 'தஞ்சை விடங்கர்' என்பது. மரக்கால் 'ஆடவல்லான்' என்பது.

அணிகள்

இராசராசன் திருப்பள்ளித்தொங்கல், மகுடம், முத்துமகுடம் முதலிய பொன்னாற்செய்த அணிகளும், வைரம் வைடூரியம் கோமேதகம் முதலிய இரத்தினங்கள் பதித்த ஆபரணங்களும் கோயிலுக்கு நிறையக் கொடுத்தான். இவன் தமக்கையாரும், மனைவி

யாரும், இரு மகளிரும் செய்த அறப்பணிகள் பலப் பல. அணிகளைக் குறிப்பிடும்பொழுது அரக்கு, செப் பாணி, சரடு இவைகளை நீக்கி எடைபோட்டுத் திட்ட மாகக் கூறி இருப்பது குறிப்பிடத் தக்கது. அவை களில் மணிகள் பதித்திருந்தால், மணிகள் இத்தனை என்று திட்டமாகக் கூறுவர். பொன்னைக் குறிப் பிடும்போது அதனுடைய மதிப்பு, மாற்று முதலிய வற்றைக் கூறுவர்.

திருமஞ்சனம்

மூன்று வேளை பூசனை நடைபெறும். சண்பக மொட்டு, ஏலவரிசி முதலியவை கலந்த நன்னீரால் திருமஞ்சனம் செய்யப்பட்டது. நெய்விளக்குகள் எரிந்தன. பழைய அரிசியாற் சமைத்த அமுது, கறியமுது, பருப்பமுது, நெய்யமுது, தயிரமுது, அடைக்காயமுது, வெள்ளிலையமுது முதலியன நாள் தோறும் படைக்கப்பட்டன. இவற்றிற்கெல்லாம் இராசராசன் 35 சிற்றூர்களைத் தேவதானமாகக் கொடுத்திருந்தான்.

விழா

திங்கள்தோறும் இராசராசன் பிறந்த நாளாகிய சதயநாள் விழா நடைபெற்றது. கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் விழாவொன்று நடைபெற்றது. இப்பதின்மூன்று விழாக்களன்றி, வைகாசி மாதம் ஆண்டுவிழா ஒன்பது நாட்கள் நடைபெற்றது.

விழாக் காலங்களில் இராசராசேஸ்வர நாடகம், குற வஞ்சி நாடகம் முதலியன நடைபெற்றன.

ஓவியம்

மூலஸ்தானத்தைச் சுற்றியுள்ள உள்ளறைச் சுவர் மீதும், மண்டப மேற்கட்டியிலும் சில ஓவியங் கள் காணப்படுகின்றன. இவற்றில் இரண்டு படை கள் இருக்கின்றன. மேற்படையில் காணப்படுபவை நாயக்கர் காலத்து ஓவியங்கள். அப்படையை நீக்கி விட்டு உள்ளே பார்த்தால், இராசராசன் காலத்து ஓவியங்களைக் காணலாம். இவ்வோவியங்கள் சுந்தர மூர்த்தி நாயனாருடைய வரலாற்றையும், பரமசிவன் திரிபுரம் எரித்த வரலாற்றையும், அக்கால மக்கள் வாழ்க்கையையும் விளக்குகின்றன. சோழர் காலத் தவை ஆன இவ்வோவியங்கள் மிகவும் உயர்ந்தவை எனக் கருதப்படுகின்றன.

5. இராசராசன் திருமுறை கண்டது

சைவ சமயாசாரியருள் திருநாவுக்கரசரும், திரு ஞானசம்பந்தரும் ஏழாம் நூற்றாண்டினர். சுந்தரர் ஒன்பதாம் நூற்றாண்டினர். இம்மூவருடைய தேவா ரங்கள் விஜயாலயன் காலத்திலிருந்தே கோயில்களில் ஓதப்பட்டுவந்தன. திருவாரூருக்கு அடிக்கடி சென்று கடவுளை வணங்கி வரும் இராசராசன், தேவாரப் பாடல்கள் அங்கு ஓதப்பட்டு வருவதைக் கண்டான். அதில் ஈடுபட்ட மன்னன், அவர்கள் ஓதியவை போக

எஞ்சியவற்றைப் பற்றிக் கேட்டபொழுது 'அறியோம்' என்றனர். அரசன், மனம் வருந்தினன்; எங்ஙனமாயினும், தேவாரம் முழுமையும் இருக்கும் இடத்தைக் காண வேண்டும் என்று முடிவு கட்டினன்.

அந்தணப் பெரியார் நம்பியாண்டார் நம்பியைப் பற்றி அரசன் கேள்விப்பட்டான். அவரே தனக்கு உதவிபுரிய முடியும் என்று அறிந்த மன்னன், அவர் ஊராகிய திருநாரையூரை அடைந்து, தன் விருப்பத்தைக் கூற, அவர் சிதம்பரத்திற் பொன்னம்பலத்தின் மேற்றிசையில் மூவர் முத்திரை இட்ட அறையில் அவை இருப்பதைக் கூறினர்.

அளவிலா மகிழ்ச்சி அடைந்த மன்னன், தில்லையை அடைந்து, அவ்வறையைத் திறக்கும்படி கேட்டபொழுது அந்தணர், 'தேவார ஆசிரியர் மூவரும் வந்தா லொழிய அறையைத் திறக்கமாட்டோம்,' என மறுத்தனர்.

அறிவிற்சிறந்த அரசன், மூவர் படிமங்களையும் பூசைசெய்து, அலங்கரித்து, ஊர்வலமாகக் கொண்டு வந்து அறையின் முன்பு வைத்தனன். அந்தணரும் வேறு வழியின்றி அறையைத் திறந்தனர்.

மன்னன் அங்கே செல்லரித்த ஏடுகள் குவிந்து கிடக்கக் கண்டான். அழிந்தவை போக எஞ்சியவற்றை நம்பியாண்டார் நம்பியிடம் கொடுத்து ஒழுங்கு படுத்துமாறு கூறினன். அவரும் சம்பந்த

ருடைய 384 பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், அப்பருடைய 312 பதிகங்களை அடுத்த மூன்று திருமுறைகளாகவும், சுந்தரருடைய பதிகங்களை ஏழாவது திருமுறையாகவும் வகுத்தனர். எனவே இம்மூவர் தேவாரப் பதிகங்களும் முதல் ஏழு திருமுறைகள் எனப்பட்டன. இவற்றை 'அடங்கன் முறை' எனவும் கூறுவர்.

இவ்வாறு தேவாரப் பதிகங்களைக் கண்டெடுத்து ஒழுங்கு படுத்தித் தமிழ் நாட்டிற்குக் கொடுத்த பெருமை இராசராசனுக்கே உரியது. இராசராசன் இப்பணியைச் செய்யவில்லை ஆயின், நாம் இப்பொழுதுள்ள தேவாரப் பதிகங்களையும் இழந்திருப்போம். தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு பகுதி இருட்டாகவே இருந்திருக்கும்.

6. இராசராசன் அரசியல்

அரசனும் இளவரசனும்

சோழநாட்டின் தலைவன் இராசராசன். நாட்டில் நிகழும் நன்மை தீமைக்கு இராசராசனே பொறுப்பு. இவன் தன் குடிகளின் நன்மையையே நாடி ஆட்சி புரிந்து வந்தான்; ஆண்டு வரும்பொழுதே தன் மகனாகிய இராசேந்திரனையும் ஆட்சியில் பழக்கி வந்தான். கி. பி. 1012-ல் அவனுக்கு இளவரசுப் பட்டங் கட்டி, 'இராசேந்திரன்' என்ற பட்டத்தையும் வழங்கினான். அப்பெயரே அவனுக்கு என்றும் வழங்குவ

தாயிற்று. தந்தை இறந்த பின்பு கி. பி. 1014-ல் இராசேந்திரன் சோழ நாட்டிற்கு அரசனானன்.

நாட்டின் பரப்பு

இராசராசன் காலத்துச் சோழநாடு பாண்டி மண்டலம், சேர மண்டலம், தொண்டை மண்டலம், மலை நாடு, கங்கபாடி, நுளம்ப பாடி, தடிகை பாடி, குடமலை நாடு, இலங்கை, மால்தீவு ஆகிய இப்பகுதிகளையெல்லாம் தன்னகத்தே அடக்கிப் பரந்து கிடந்தது. அரசன் இவ்வளவு பரந்த நாட்டைச் சிறந்த முறையில் ஆட்சி செலுத்துதற்குப் பல பகுதிகளாகப் பகுத்துக் கொண்டான்.

ஆட்சிக்குரிய பாகுபாடுகள்

இராசராசன் சோழ இராச்சியத்தை எட்டு அல்லது ஒன்பது மண்டலங்களாகப் பகுத்துக் கொண்டரான். ஒவ்வொரு மண்டலமும் பல வளநாடுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. சோழ மண்டலம் மட்டும் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவ்வளநாடுகளுக்கு இராசராசன் தனது இயற்பெயரையும், சிறப்புப் பெயர்களையுமே பெயர்களாகக் கொடுத்தான். வளநாடுகளைத் தற்பொழுதுள்ள ஜில்லாக்களுக்குச் சமமாகச் சொல்லலாம். வளநாடு ஒவ்வொன்றும் நாடுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. நாடுகள் சிலவிடங்களிற் ‘கூற்றம்’ எனவும், ‘கோட்டம்’ எனவும் வழங்கப் பெற்றன. நாடுகள்

தற்பொழுதுள்ள தாலுக்காக்களுக்குச் சமமானவை. ஒவ்வொரு நாடும் பல ஊர்களைத் தன்னிடத்தே கொண்டிருந்தது. ஊர் மிகப் பெரிதாக இருக்குமாயின், அதனை ஒரு கூற்றமாகக் கருதி, அதனைத் 'தனியூர்' அல்லது 'தங்கூற்று' என அழைத்தனர். ஓர் ஊரைக் குறிப்பிட வேண்டுமாயின், அதற்குரிய மண்டலம், வளநாடு, நாடு முதலியவற்றை முறைப்படிக் கூறி, இறுதியில் ஊரைக் கூறினர்.

கிராம ஆட்சி

சோழர் காலத்தில் கிராம ஆட்சி கிராமத்தார் கையிலேயே விடப்பட்டிருந்தது. அதற்கென ஓர் அவையைத் தேர்ந்தெடுத்து, அதனைப் பல வாரியங்களாகப் (குழுக்களாகப்) பிரித்திருந்தனர். அவற்றுள் 'சம்வத்சர வாரியம்' குற்றம் செய்தவர்களுக்கு நியாயம் வழங்கியும், அறநிலையங்களைக் கண்காணித்தும் வந்தது. 'ஏரி வாரியம்' ஏரி, குளம், ஊருணி முதலிய நீர்நிலைகளைப் பாதுகாத்து நீர்ப்பாசன வசதிகளைப் புரிந்து வந்தது. 'தோட்ட வாரியம்' புன்செய் நிலம், தோட்டம் முதலியவைகளைக் கண்காணித்து வந்தது. 'கஞ்சவார வாரியம்' அரசாங்கத்திற்குரிய தானியங்களைக் குடிகளிடமிருந்து பெற்று, அரசாங்கத்தாரிடம் ஒப்படைத்து வந்தது. 'பொன் வாரியம்' பல வகையானும் பெற்ற செப்புப் பொற்காசுகளை ஆராய்ந்து அவற்றின் உண்மை கண்டுவந்தது.

இவ்வவையில் உறுப்பினர் ஆதற்குரியர்

(1) முப்பத்தைந்து வயதற்குமேல் எழுபது வயதிற்கு உட்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வோர் உறுப்பினரும் அவ்வக்குடும்பில் வாழ்பவராதல் வேண்டும்.

(3) அரசாங்க வரி கொடுத்தற்குரிய கால் வேலி நிலத்திற்குக் குறையாத நிலமுடையர் ஆதல் வேண்டும்.

(4) தமது சொந்த மனையில் வீடு கட்டி இருப்பவராதல் வேண்டும்.

(5) வேதசாத்திர வல்லுநராயும், காரிய நிபுணராயும் இருத்தல் வேண்டும்.

(6) நல்வழியிற் பொருள் தேடியவராயும் தூய ஆன்மாவுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(7) மூவாண்டிற்குள் எந்த வாரியத்திலும் உறுப்பினராய் இராதவர் ஆதல் வேண்டும்.

உறுப்பினராதற்குரிமையற்றவர்கள்

(1) பிறர் மனை நயந்தோரும், களவு, கொலை, கள், சூது என்ற பெருந்தீவினைகள் செய்தோரும், இவர்க்கு உறவினரும்.

(2) தீயோர் சேர்க்கையுடையோர். (இவர்பிராயச்சித்தம் செய்த பின்பு உறுப்பினராகலாம்.)

(3) நன்மையைத் தீமையென்றும், தீமையை நன்மையென்றும் விதண்டா வாதம் புரிபவர்.

(4) கையூட்டுப் பெற்றோர்.

(5) குற்றஞ் செய்து கழுதையேறினவர்கள்.

தேர்தல் முறை

பொது மக்களே கிராமசபையின் உறுப்பினரை ஆண்டுதோறும் தேர்ந்தெடுப்பர். இதற்கென ஒவ்வோர் ஊரையும் பல குடும்புகளாகப் பிரித்திருந்தனர். தேர்தல் குறித்த நாளில் ஒவ்வொரு குடும்பிலு முள்ளார் தமக்குத் தகுதியுடையார் என்று தோன்று பவருடைய பெயரைத் தனித்தனி ஓலையில் எழுதி, அவ்வோலைகளை ஒருங்குசேர்த்து அவை எக்குடும்பிற் குரிய எனப் புலனும் வண்ணம் அக்குடும்பின் பெயர் எழுதிய வாயோலை யொன்றைச் சேர்த்துக் கட்டிக் குடத்திலிடுவர். இவ்வாறே ஒவ்வொரு குடும்பிலும் நடைபெறும். பின்னர்ச் சபை கூடுதற்கு அமைக்கப் பட்ட மாளிகையில் அவ்வூரிலுள்ள இளைஞர்முதல் முதியோர் ஈறாக உள்ள அனைவரும் கூடுவர். அக் கூட்டத்தினிடையே ஒரு குடம் வைக்கப் பெறும். அவ்வூர் நம்பிமாரும் அங்கிருப்பர். அவர்களுள் வயது முதிர்ந்தோர் ஒருவர் அக்குடத்தை எடுத்து, அதனுள் ஒன்றுமில்லை என்பதை எல்லாருக்கும் காட்டிக் கீழே வைப்பர். பின்னர், பகலிரவு என்ற வேறுபாடு அறியாத ஓர் இளைஞனைக் கொண்டு ஓரோலைக் கட்டை எடுப்பித்து, அதனை அவிழ்த்து வேறோர் குடத்திலிட்டுக் குலுக்கி, அவற்றுள் அச்

சிறுவனைக் கொண்டே ஓலை ஒன்றை எடுக்கச் செய்வர். அதனை அந்நம்பிமார் பெற்று அதனுள் எழுதப்பெற்ற பெயரை எல்லோரும் அறியப் படித்துக் காட்டி, ஏனைய நம்பிமாரையும் படிக்கச் செய்வர்; பின், கரணத்தானைக் கொண்டு, அப்பெயரைக் குறிப்பிடுவர். அப்பெயருடையவரே அக்குடும்பின் உறுப்பினர். இவ்வாறே, ஒவ்வொரு குடும்பிற்கும் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரை முற்கூறிய ஐந்து வாரியங்களிலும் ஒவ்வொன்றிற்கும் இத்தனைபேர் என்று பிரித்துப் பணியாற்றச் செய்வர்.

இவ்வுறுப்பினர் அலுவற்காலம் ஓராண்டு. இடையில் இவர்கள் குற்றம் செய்து விலக்கப்பட்டாலன்றி, அவ்வோராண்டளவும் எத்தகைய ஊதியமும் இன்றி இவர்கள் பணியாற்றக் கடமைப்பட்டவர். இவர்களை 'ஆளுங் கணத்தார்' என்று அழைத்தனர். இவர்கள் கூடுவதற்கு ஊர்தோறும் மாளிகைகள் அமைக்கப் பட்டிருந்தன. சில ஊர்களில் கோயில் மண்டபங்களிலும், பெரிய மரத்தின்கீழும் இக்கழகத்தினர் கூடினர். இவ்வுறுப்பினர் தேர்தல் காலத்தில் அரசாங்க அதிகாரி ஒருவன் உடன் இருப்பான்.

கரணத்தான்

கரணத்தான் சபையார் பணித்தவற்றைச் செய்ய வேண்டும். இவனை மத்தியஸ்தன் எனவும் கூறுவர்.

நல்லொழுக்கம் உடையவனுக நல்வழியில் ஈட்டிய பொருளுடையவனுக உள்ள ஒருவனையே கரணத்தானுக நியமிப்பர். இவன் அச் சபையின் கணக்கெழுதவேண்டும் ; தான் எழுதிய கணக்கைத் தானே ஆண்டுதோறும் காட்டுதற்குக் கடமைப்பட்டவன். இவன் கணக்குக் காட்டிச் சுத்தன் என்று சபையார் ஒப்புக் கொண்ட பின்புதான் மேலே கணக்கெழுத வேண்டும். இவன் சம்பளம் ஓராண்டிற்கு ஏழு கழஞ்சு பொன்னும், இரண்டு கூறையும், ஒரு நாளைக்கு ஒரு நாழி நெல்லும் ஆகும். கணக்கைச் சபையாரிடம் பார்வைக்குக் கொடுக்கும்பொழுது, இவன் கையில் காய்ச்சிய மழுவை ஏந்தல் வேண்டும். ஊறு நேராதாயின், ஒரு கழஞ்சுக்கு மேல் காற்பங்கு பொன் சேர்த்துக் கொடுக்கப்படும். ஊறு நேருமாயின், பத்துக் கழஞ்சு பொன் இவன் தண்டம் கொடுக்க வேண்டும்.

ஆவணக்களரி

ஆவணங்களை இங்குதான் பதிவு செய்து வந்தனர். இஃது ஊர்தோறும் இருந்தது. நிலத்தை விற்போரும் வாங்குவோரும் ஆவணத்துடன் சென்று பதிவு செய்து கொண்டனர். நிலத்தின் விலை, எல்லை முதலியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டனர். முக்கியமான ஆவணங்களைக் கோயிற்சுவரில் பொறித்து வைத்தனர்.

அரசியல் அதிகாரிகள்

அரசன் ஆட்சிக் காரியங்களைப் பல அதிகாரிகளுடன் இருந்து நன்கு ஆராய்ந்தே செய்துவந்தான். இவர்கள் எப்பொழுதும் அரசனுக்கு அறவுரை கூறித் துணைபுரிந்து வந்தனர். இவர்களை 'உடன் கூட்டத்ததிகாரிகள்' என்று அழைத்தனர்.

இவர்களைத் தவிர, பல துறைகளிலும் பல தலைவர்கள் இருந்தனர். அவர்களிற் சிலர், படைத் தலைவர், நாட்டதிகாரிகள், நாட்டையளப்போர், நாடு கண்காட்சி, வரியிலார், வரிக்குக் கூறு செய்வார், புரவு வரி, வரிப்புத்தகம், பட்டோலைப் பெருமான், விடையதிகாரி, திருவாய்க் கேள்வி, திருமந்திர ஓலை, திருமந்திர ஓலைநாயகம் என்பவர்.

மேலும், கருமிகள், பணிமக்கள், என்ற அரசியல் அதிகாரிகளும் இருந்தனர். கருமிகள் பெருந்தரம், சிறுதரம் என இருவகைப்படுவர்.

நிலவரியும் பிறவரியும்

குடிகள் அரசனுக்குக் கொடுக்க வேண்டிய நில வரி 'காணிக்கடன்' எனப்பட்டது. இது விளையும் பொருளில் ஆறில் ஒரு பங்கு. இதனைப் பொன்னாகவும் கொடுத்து வந்தனர். காணிக்கடன் கொடுக்காத நிலங்களை ஊர்ச் சபையினர் பறிமுதல் செய்து விற்றுப் பணத்தை அரசாங்கத்திற் சேர்த்தனர்.

குயவன்வரி, தறிவரி, செக்குவரி, தட்டாரவரி,

மீன்வரி, ஓடவரி, வண்ணார்வரி, தண்ணீர்வரி, திருமணவரி, நாட்டுப்பாதுகாவல்வரி, சுங்கவரி முதலிய வரிகளையும் மக்கள் செலுத்தினர். இவை இக்காலத்தில் இருக்கும் தொழில்வரி போன்றவை.

இறையிலி

சைவ வைணவக் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்கள் 'தேவதானம்' எனவும், சமண பௌத்த கோயில்களுக்குக் கொடுக்கப் பெற்றவை 'பள்ளிச் சந்தம்' எனவும், பார்ப்பனர்களுக்கு விடப்பட்டவை 'பிரமதேயம்' எனவும் புலவர்களுக்குக் கொடுக்கப் பெற்றவை 'புலவர் முற்றூட்டு' எனவும் வழங்கப் பெற்றன. இவையெல்லாம் இறையிலி நிலங்கள்.

அளவை

மணி, பொன், வெள்ளி முதலிய பொருள்களைக் கழஞ்சு, மஞ்சாடி, குன்றி என்னும் நிறைகல்லால் அளந்தனர். செம்பு, பித்தளை, வெண்கலம் முதலிய வற்றைப் பலம், கஃசு என்னும் நிறைகற்களால் அளந்தனர். அரசாங்க முத்திரை இட்ட கல் 'குடிஞைக் கல்' என்பது. பொன்னின் மாற்று அறிதற்கு 'ஆணி' என்னும் மாத்திரைக்கல் இருந்தது.

பால், தயிர், நெய், அரிசி, நெல் முதலிய வற்றைச் செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலம் என்னும் முகக்கும் கருவிகளால் அளந்தனர். அரசாங்க முத்திரை இட்ட

மரக்கால் ‘ஆட வல்லான்’ என்பது. விரல், சாண், முழம் என்பன அக்கால நீட்டலளவை.

நில அளவு

நிலங்களை அளந்தாலன்றி, விளைநிலங்கள் இவ்வளவு என்றும், காணிக்கடன் இவ்வளவு என்றும் திட்டமாகக் கூறமுடியாது. ஆகையால் சோழ இராஜ்யம் முழுவதையும் இராசராசன் அளந்து கணக்கெடுக்கும்படி கட்டளை இட்டான். இது கி. பி. 1001-ல் நடைபெற்றது. நிலம் அளந்த கோல் ‘உலகளந்த கோல்’ என்னும் பெயருடையது. இது பதினாறு சாண் நீளமுடையது. நீர், நிலம், கொல்லை, காடு என நன்செய் நிலங்களைப் பகுத்திருந்தனர். சேனாபதி குரவன் உலகளந்தானான இராசராசமாராயன் என்பவனே இராசராசன் காலத்து நிலங்களை அளந்து கணக்கிட்டவன்.

நாணயங்கள்

இராசராசன் காலத்து நாணயங்கள் செம்பாலும் பொன்னாலும் ஆனவை. பொன் நாணயம் பொற்காசு எனப்பட்டது. மஞ்சாடி என்பது சிறிய நாணயம். ‘துளைப்பொன்’ என்ற காசும் வழக்கில் இருந்தது. ‘காய்ச்சி, உருக்கி, வெட்டி நாணயமாக்கினும் மாற்றும் நிறையும் தூய்மையும் குன்றாதது’ இத்துளைப்பொன்.

இத்துணைச் சிறப்போடு இராசராசன் ஆட்சி புரிந்தான்.

III. மாறவர்மன் அரிகேசரி (640-670)

1. மாறவர்மன் அரிகேசரியின் முன்னோர்

உலகம் படைக்கப்பட்ட காலத்திலிருந்தே சிறப்புடன் நிலைபெற்று வருகின்ற பண்டைக் குடிகளிற் பாண்டியர் குடியும் ஒன்றெனக் கருதப்படுகிறது. பண்டைக் காலத்தில் ஆண்ட பாண்டியர்களைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் விரிவாகக் கூறுகின்றன.

இவர்களில், பாண்டியன் முடத்திருமாறன், கபாடபுரம் என்னும் தலைநகரம் கடல்கோளால் அழிந்த பொழுது, அங்கிருந்து தப்பியோடி வந்து, மதுரையில் மூன்றாஞ் சங்கம் கூட்டித் தமிழை வளர்த்து வந்தான்.

தன் மனைவியைத் தனியே வீட்டில் இருக்கச் செய்து பிறநாடு சென்றிருந்த ஒருவனுடைய வீட்டில், இரவில் பேச்சொலி கேட்ட பாண்டியன், அக்கணவன் வந்துவிட்ட உண்மை உணராது, அவன் வீட்டில் திருடர் புகுந்தனரோ என அஞ்சிக் கதவைத் தட்டினான்; தட்டியதும் உண்மையுணர்ந்தான்; தான் செய்த அக்குற்றத்திற்காகக் கதவைத் தட்டிய தன் கையை வாளால் வெட்டினான்.

'கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி' என்பவனும் 'பாண்டியன் அறிவுடை நம்பி' என்பவனும் சிறந்த புலவர்களாய் விளங்கினர். இவர்கள் இயற்றிய

பாக்கள் பல சங்க இலக்கியங்களில் தொகுக்கப்பட்டுள்ளன.

'ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்' புலமையும், வீரமும் நிறைந்தவன். இவன் மனைவி கற்பிற் சிறந்தவள் ; பூதப்பாண்டியன் இறந்ததும், சான்றோர் பலர் விலக்குவதையும் கவனியாது, அவர்களை மறுத்துக் கூறிக் கணவனுடன் உடன்கட்டை ஏறினாள்.

'பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்' கோவலன் கண்ணகி இவர்கள் மதுரையை அடைந்தபொழுது, மதுரையை ஆண்டவன். கோவலனைத் தான் தவறுதலாக எண்ணிக் கொலை செய்தமையை உணர்ந்தபொழுது, "கொல்லன் கூறிய சொற்களை மெய் யெனக்கொண்டு கோவலனைக் கொன்ற யானோ அரசன்? யானே கள்வன்! பாண்டியர் அரசியல் என் காலம் முதல் தவறிற்றே!" என்று கூறி உயிர்துறந்தான்.

'தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்' என்பவன், இளமையிலேயே பட்டமெய்தி, தன்னை எதிர்த்த ஐவரைத் தலையாலங்கானம் என்ற இடத்தில் வென்று பெருமைகொண்டவன்.

இத்தகைய பாண்டியர் பலர் ஆண்ட சங்ககாலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டோடு முடிவடைந்தது என்று கூறலாம். அது முதல் கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதி வரையிற் பாண்டிய அரசர்களைப்

பற்றி நாம் ஒன்றும் அறிந்து கொள்ள முடியவில்லை. இந்த இடைப்பட்ட காலத்திற் பாண்டி நாட்டையும் பிற தமிழ் நாட்டையும் களப்பிரர் என்னும் மரபினர் கைப்பற்றி ஆண்டுவந்ததாகக் கூறுகின்றனர்.

'கடுங்கோன்' என்னும் பாண்டியன் இந்தக் களப்பிர அரசர்களைச் சுமார் கி. பி. 575-ல் வென்று, பாண்டியர் ஆட்சியைத் திரும்பவும் நிலைநாட்டினன். இவன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். "பெரும்புயலின்கண்ணே அகப்பட்டுக் கொந்தளிக்கும் கடல் நடுவே இளஞ்சூரியன் உதித்தாற் போன்று கடுங்கோன் தோன்றிப் பாண்டியர் ஆட்சியைத் திரும்பவும் நிறுவினன்," என்றுஇவனைப் பற்றிச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

இவனுக்குப் பின்பு இவனுடைய மகன் 'மாறவர்மன் அவனி சூளாமணி' என்பவன் பட்டம்எய்தினன். இவன் காலம் முதல், பாண்டியர் 'மாறவர்மன்' 'சடையவர்மன்' என்னும் பெயர்களை மாறிமாறிப் புனைந்து கொண்டனர்.

அவனிசூளாமணியின் புதல்வன் 'செழியன் சேந்தன்' என்பவன் சடையவர்மன் என்ற பட்டப் பெயரோடு கி.பி. 625-ல் பட்டம் ஏற்றான். 'சிலைத் தடக்கைக் கொலைக் களிற்றுச் செழியன்,' 'மண் மகளை மறுக்கடிந்த வேந்தர் வேந்தன்,' 'செங்கோற் சேந்தன்' எனச் செப்பேடுகள் இவனுடைய வெற்றி

யையும், செங்கோலையும் குறிக்கின்றன. இவனுடைய ஆட்சியின் இறுதிக் காலத்திற்றான் சீன யாத்திரிகர் யுவான்சுவாங் பாண்டி நாட்டிற்கு வந்தார். இவர் எழுதிய குறிப்பிலேதான் காஞ்சியிலிருந்து பாண்டிய நாட்டிற்குப் புறப்பட்ட காலை, அப்பொழுதுதான் பாண்டியன் இறந்ததையும், பாண்டிய நாடு பஞ்சத்தால் வாடுவதையும், மக்கள் கூறக் கேட்டதாக எழுதியிருக்கிருர். இவர் இறந்ததாகக் கூறும் அரசன் செழியன் சேந்தனே போலும் !

2. அரிகேசரியும் அவன் காலத்தவரும்

அரிகேசரி செழியன் சேந்தனுடைய மகன். சேந்தன் இறந்ததும் கி. பி. 640-ல் பட்டத்திற்கு வந்தான். மாறவர்மன் என்ற பட்டப்பெயர் புனைந்தான். இவனைச் 'சுந்தர பாண்டியன்' எனவும் 'கூன் பாண்டியன்' எனவும் கூறுவர்.

போர்ச் செயல்கள்

பாண்டியர்களுடைய நிலை இவ்வரசன் காலத்திற் சிறப்புற்றது. பாண்டிய அரசன் இப்பொழுதுதான் முதல் முதலாகச் சேரனேடும் பல்லவனேடும் பகைமை பூண்டு போர் நிகழ்த்தி வெற்றி கண்டான். மேலும், பாழி, நெல்வேலி, செந்நிலம் முதலிய இடங்களிலும் பல போர்களை இயற்றி வெற்றி பெற்ருன். இவன் தன்னேடு பகைமை பூண்ட பரதவர்களை

வென்றான் ; குறுநாட்டவர்களுடைய குலத்தைக் கெடுத்தான் ; கோழியூரையும் சோழவரசனோடு அவன் சுற்றத்தையும் கைப்பற்றினான். இவனுடைய வெற்றியைப்பற்றி, "வில்லவரும், நெல்வேலியும், விரிபொழிற் சங்கரமங்கைப் பல்லவரும், பின் கண்ட பராங்குசன்" எனச் சின்னமன்னூர்ச் செப்பேடுகள் குறிக்கின்றன.

கடுங்கோன் காலம் முதல் இது வரையிலும், பாண்டி நாடு தன் பழமையான எல்லையை விட்டு வெளியே விரிவடைந்ததில்லை. அரிகேசரிதான் முதன் முதலாகச் சேரனோடும் சோழனோடும் சண்டையிட்டு, அவர்களுடைய நாடுகளையும் பாண்டி நாட்டோடு இணைத்தான்.

யுவான் சுவாங்

அரிகேசரியின் ஆட்சியின் தொடக்கத்தில் சீன தேயத்தவராகிய யுவான் சுவாங் பாண்டி நாட்டிற்கு வந்தார். இவர் தம் வரலாற்றுக் குறிப்பிற் பாண்டி நாட்டைப்பற்றி எழுதியுள்ளார். "பாண்டி நாட்டில் மிகுதியாகக் கிடைக்கும் பொருள்கள் முத்தும் உப்பும். பாண்டிய நாட்டின் பக்கத்தே யுள்ள தீவுகளிலிருந்து கிடைக்கும் முத்துக்களும் இங்கே கொண்டுவரப் பட்டன. இவை இரண்டையும் தவிர இந்நாட்டிற் கிடைக்கக்கூடிய வேறு விசேடமான விளைபொருள் ஒன்றும் இல்லை. பாண்டிய நாடு வெப்பம் மிகுந்

துள்ளது. இந்நாட்டு மக்கள் கறுத்த மேனிகளை உடையவர்; போர் வலிமை மிக்கவர். இந்நாடு வணிகத்தால் வளம் பெற்றுச் செல்வத்தாற் சிறந்திருந்தது." இவை பாண்டி நாட்டைப்பற்றி இச்சீனதேயத்தார் எழுதியவை.

மங்கையர்க்கரசி

இவ்வம்மையார் அரிகேசரியின் மனைவியார். இவர் சோழ குடும்பத்தைச் சார்ந்தவர். சங்ககாலத்திற்கு பின்பு சோழர் குடும்பம் சிதறுண்டது. வடக்கே பல்லவரும், தெற்கே பாண்டியரும் ஒரேகாலத்தில் தங்கள் தங்கள் இராச்சியங்களை அமைத்துக் கொண்டனர். இவர்களுக்கு இடைப்பட்ட சோழ நாட்டை இருவரும் தங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொண்டனர். இக்காலத்தில், சோழர் குடும்பம் பல கிளைகளாகச் சிதறி, ஆங்காங்கே சிறிய நாடுகளை அமைத்து வந்தது. இவர்கள் தங்கள் பழைய நாட்டையும் பெருமையையும் பெறுவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர். தங்களுடைய பெண்களை வலிமையுடைய அரசர்களுக்கு மணஞ் செய்து கொடுத்துத் தங்களுடைய வலிமை தேடிக்கொள்ள முயன்றனர். இத்தகைய சோழர் குடியிலிருந்து வந்தவரே மங்கையர்க்கரசியார் என்ற இப்பெண்மணியும். இவ்வம்மையார் சிறந்த சிவபக்தை. ஆனல், அரசனே சமண மதத்தைச் சார்ந்திருந்தான். எனினும் மதங்

காரணமாக இவர் வெறுப்புக் கொண்டிலர். அம்மையாருக்கு அரசனிடத்திலிருந்த அன்பும் மதிப்பும் போற்றத் தக்கன. அரசனும் அம்மையாரிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டி வந்தான்.

குலச்சிறையார்

இவர் அரிகேசரியின் அமைச்சர். சிறந்த மதிநுட்பமும், அரசனிடத்து அளவுகடந்த அன்பும் உடையவர். இவரும் சைவசமயத்தையே சார்ந்திருந்தார். அரசனும் இவரை மதங் காரணமாக வெறுக்கவில்லை.

திருஞானசம்பந்தர்

சைவ சமயாசாரியர் நால்வரில் ஒருவராகிய திருஞானசம்பந்தர், சீர்காழியில் கௌணியர் குலத்தில் தோன்றினர். இவர் மூன்ருவது ஆண்டு நிறையும் பொழுதே உமாதேவியால் ஞானப்பால் ஊட்டப்பெற்றுச் சிவஞானம் பெற்று விளங்கினர் என்பர். அவர் சிவபெருமான்மீது பல பதிகங்களைப் பாடிப் பல தலங்களையும் சென்று வணங்கி, அடியார் புடைசூழ மதுரையை அடைந்தார். மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் இவரை எதிரேற்று அழைத்தனர். பாண்டியன் அடைந்த வெப்புநோய் சமணர்களால் நீக்கமுடியாது இருப்ப, சம்பந்தர் திருநீற்றுப் பதிகம் பாடி, திருநீற்றைப் பாண்டியன் உடம்பிற் பூசவே, அந்நோய் நீங்கியது. அரசனும்

சமண மதத்தைத் துறந்து, சைவத்திற்குத் திரும்பினுன்.

திருஞானசம்பந்தர் 1600 பதிகங்கள் பாடியதாகத் திருமுறைகண்ட புராணம் கூறுகிறது. ஆனுல் நமக்கு இப்பொழுது கிடைப்பவை 384 பதிகங்களே. இவருடைய பாடல்களைச் சிதம்பரம் பொன்னம்பலத்தில் இராசராசன் கண்டெடுத்ததையும், நம்பியாண்டார்நம்பி அவைகளை 384 பதிகங்களாகப் பிரித்து, ஒன்று இரண்டு மூன்று ஆகிய திருமுறைகளாகச் சேர்த்ததையும் முன்பே கண்டோம். இவ்வருடைய பாக்களில் இயற்கை வருணனை நிறைந்திருக்கிறது. இவர் இளமையிலேயே ஞானப் பால் உண்டமைக்கும், பதிகங்கள் பாடினமைக்கும் இவருடைய பாக்களே சான்று கூறும்.

இவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த இன்ஞெரு சைவப் பெரியார் திருநாவுக்கரசர். இவர்கள் இருவரும் சிவபெருமானையே கடவுளாகக்கொண்டு வணங்கினுலும், வணங்கிய முறையில் வேறுபடுகின்றனர். திருநாவுக்கரசர் தம்மைச் சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் அடிமையாகக் கொண்டு அவர்களை வழிபட்டு வந்தார். இந்நெறியை 'அடிமை நெறி' என்பர். இதற்கு அன்பே சிறந்த குணமாக வேண்டப்படுவது ஆதலின், சேக்கிழார் இவரை 'அன்புக்கடல்' என்ருர். திரு

ஞானசம்பந்தர் கடவுளைத் தந்தையாகவும், தம்மை மைந்தராகவும் கருதி வணங்கி வந்தார். இதற்கு 'மகன்மைநெறி' என்று பெயர். இதற்குச் சிறப்பாக வேண்டப்படும் குணம் அருள். ஆகையால் சேக்கிழார் இவரை அருட்கடல் என்று கூறினர்.

3. தமிழ் நாட்டில் அக்காலச் சமயநிலை

சங்க காலத்தில் சைவ வைணவக் கடவுளரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சமணமும் பௌத்தமும் சங்க காலத்தை அடுத்துத் தமிழ் நாட்டில் வளர்ச்சியுற்றன என்று கூறலாம். சங்க காலத்தில், இந்நான்கு வேறுபட்ட மதங்கள் தமிழ் நாட்டில் நிலைபெற்றிருந்தாலும், இவைகளுக்குள்ளே போட்டி, பொறாமை இருந்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் தத்தம் மதக் கொள்கைகளை எடுத்துக் கூறினரே ஒழிய, பிறமதங்களைச் சார்ந்தவர்களை அச்சுறுத்தவோ துன்புறுத்தவோ இல்லை. மதங்களைப் பொறுத்த வரையிலும் அமைதி நிலவிய காலம் சங்க காலம் என்று கூறலாம்.

சங்க காலத்தை அடுத்து வைணவமும் சைவமும் நிலை தளர்ந்தன. சமணமும் பௌத்தமும் தமிழ் நாட்டில் பரவிவந்தன. இதற்குக் காரணங்கள் பல. சமணரும் பௌத்தரும் மக்களைத் தம் மதத்திற்குத் திருப்ப வேண்டுமானால், தம்மத உண்மை

களை அவர்கள் மொழிகளின் மூலமாகவே எடுத்துக் கூறவேண்டும் என்பதை உணர்ந்திருந்தனர். ஆகை யால், அவர்கள் முதலில் தமிழை நன்கு கற்றுப் புலமை பெற்றனர். பின்பு, தம் மதவுண்மைகளைப் புகுத்தி, அநேக பெரிய காவியங்களைத் தமிழில் இயற்றினர். இலக்கியச்சுவை நிறைந்த இம்மத நூல்களைத் தமிழர் விரும்பிக் கற்றனர்; அம் மதவுண் மைகளையும் அறிந்துகொண்டனர். அன்றியும், அனேக பெரும்பள்ளிகளைக் கட்டித் தமிழ்ச் சிறுர் களுக்குக் கல்வி போதித்து வந்தனர். அதற்குத் தகுந்த நீதிகளை எடுத்துக் கூறும் நூல்கள் பல வற்றை இயற்றினர். மக்களுக்கு வைத்தியம் செய் வதற்கு அனேக வைத்திய சாலைகளை நிறுவினர். இவைகளெல்லாம் தமிழர் மனதைக் கவர்ந்தன. ஆனால், மற்ற வைதிக மதத்தினர்களோ, தங்கள் மதநூல்களை மக்கள் மொழியில் எடுத்துக் கூருது மறைத்து வைத்தனர்.

தமிழ் நாட்டில் நிலவியிருந்த இந்த நிலையில், ஆரும் நூற்ருண்டிலிருந்து ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. அரிகேசரி பாண்டியன் வாழ்ந்த காலம் தமிழ் நாட்டில் மதமாற்றம் நிகழ்ந்த காலம் எனலாம். சமண பௌத்த குருக்கள் தம் உண்மை நெறிகளைக் கைவிட்டனர். பெரிய மடங்களில் வாழ்ந்து உண்டு உடுத்துக் களியாட்டங்களிற் காலங் கழித்த அன்ணர்

தம்மதத் தலைவர்களின் பெருமையை மறந்தனர். மதவுண்மைகளைத் தங்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தகுந்தவாறு திரித்துக் கொண்டனர். தங்களுடைய கடமைகளை மறந்து வாழ்ந்தனர். ஏழாவது நூற்றுண்டின் ஆரம்பத்திற் காஞ்சியை ஆண்ட பல்லவப் பேரரசன் மகேந்திரவர்மன் அக்காலத்துத் தமிழ் நாட்டில் நிலை பெற்றிருந்த மதச் சீர்கேடான நிலையைச் சித்திரித்து 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற நாடகம் ஒன்று எழுதினன். பௌத்த சன்னியாசியினுடைய வாழ்க்கையையும், சாக்கிய பிச்சு, காபாலிகர் இவர்களுடைய வாழ்க்கையையும் அதில் நன்கு கூறியுள்ளான். இவற்ருேடு சமண புத்த மதங்களினுள்ளேயே பல பிரிவுகள் ஏற்பட்டுத் தம்முள்ளே பூசல் நிகழ்த்தின. இதனுல், தமிழர் இம் மதங்களில் நம்பிக்கை இழந்தனர். இச்சமயத்தில், காஞ்சிக்கு வந்த யுவான் சுவாங் என்பவரும் புத்த மதம் வலியற்று இருந்ததைக் கூறி வருந்தினுர்.

இவ்வாறு இம்மதங்கள் இரண்டும் தளர்ச்சி அடையும் நிலையில் சைவரும் வைணவரும் எழுந்தனர். பல்லவ பாண்டியர் ஆண்ட இக்காலம் தேவார ஆசிரியர்களும், வைணவ ஆழ்வார்களும் தமிழ் நாட்டில் தோன்றித் தம் மதங்களை வளர்த்து வந்த காலமாகும். இவர்கள் கடவுளைப் பக்தி முறையில் வழிபடுவதைத் தமிழ்நாடு முழுவதும் பரப்பினர்.

மக்கள் மொழியாகிய தமிழ் மொழியிலேயே கடவுளைப் பற்றிய பாக்கள் பலவற்றை இயற்றினர். இப்பாக்கள் இசையுடன் பொருந்தப் பாடப்பட்டவை. ஆகையால், மக்கள் மனதை எளிதிற் கவர்ந்தன. இவர்கள் இயற்றிய பாக்களைப் பாடிக்கொண்டு பெரும்பான்மையான அடியார்கள் கோயில்தோறும் சென்று வழிபடுவாராயினர்.

இந்த நிலையில் சமண புத்த மதங்கள் ஒருபக்கமாகவும், சைவ வைணவ மதங்கள் மற்ருரு பக்கமாகவும் நின்று தம்மதங்களைக் காக்க முற்பட்டன. சமணர் தம் மதத்தைக் காக்க அரசனைத் தம் வழித் திருப்பினர். பல்லவ அரசன் மகேந்திரவர்மன் சமண சமயத்தைச் சார்ந்திருந்தான். திருநாவுக்கரசரும் முதலில் சமணத்தையே சார்ந்திருந்தார். ஆனல், சைவர் இவர்களைத் தம் பக்கம் திருப்ப முயன்றனர். திலகவதியார் பெரும்பக்தியின் பயனுக திருநாவுக்கரசர் சைவத்தை மீண்டுஞ் சார்ந்தார். இதனைக் கண்ட சமணர் மகேந்திரவர்மனைத் தூண்டி அப்பருக்குப் பல இடையூறுகளைச் செய்வித்தனர். ஆனல், அப்பர் அத் துன்பங்களிலிருந்து தப்பிவந்து, இறுதியில் மகேந்திரவர்மனையே சைவனுக மாற்றினர்.

4. பாண்டியர் அரசியல்

இராசராசனுடைய அரசியல் முறையைப்பற்றிப் பார்த்தோம். அங்குக் கூறிய அரசியல் முறை

சோழர்களுக்கும், பாண்டிய, சேரர்களுக்கும் பெரும் பான்மையும் ஒத்து வரும். எனினும், பாண்டியர் ஆட்சியில் நாம் காணும் சில சிறப்பான இயல்புகளை இங்குக் காண்போம் :

அரசனும் இளவரசனும்

பாண்டி மண்டலத்தின் தலைவன் பாண்டிய மன்னன். மன்னன் தன் ஆட்சிக்காலத்திலேயே தன் மக்களை அரசியல் முறைகளில் பழக்கி வந்தான். இம் முறையைச் சோழர்களும் பின்பற்றி வந்ததை முன்பு கண்டோம். சில சமயங்களில் இப்பாண்டியர்கள் தம் தம்பிமார்களையும் இத்துறைகளில் பழக்கி வந்த துண்டு. மூத்த மகனுக்கு இளவரசுப்பட்டம் கட்டி, நாட்டின் ஒரு பகுதியை அவனே ஆளும்படி விட்டு வந்தனர். பாண்டியர்களுடைய சிறந்த துறைமுகப் பட்டினம் கொற்கை. பாண்டியவரசன் மதுரையி லிருந்து ஆட்சி புரிய, இளவரசன் கொற்கையி லிருந்து அப்பகுதியை ஆண்டுவருதல் மரபு. கோவ லன் காலத்தில் ஆண்ட பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் இறந்ததும், கொற்கையி லிருந்த இளவரசன் வெற்றிவேற் செழியன் மதுரைக்கு வந்து முடிசூடிக்கொண்டான் என்பதை அறிகிறோம்.

நாட்டின் உட்பிரிவுகள்

பாண்டி மண்டலம் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், புதுக்கோட்டையில் ஒரு பகுதி

ஆகிய இவற்றைத் தன்னகத்தே கொண்டது. இப் பரந்த நாட்டில் செவ்விய முறையில் ஆட்சி செலுத்து தற்கு இதனைப் பல பிரிவுகளாகப் பிரித்துக்கொண் டனர். இப்பிரிவுகள் பெரும்பான்மையும் சோழர் ஆட்சியில் கூறியவற்றைப் போலவே அமைந்தன. கடைச்சங்க நாட்களிலும், இப்பிரிவுகள் இருந்ததாக அறிய இடம் இருக்கிறது. பறம்பு நாடு முந்நூறு ஊர்களைத் தன்னகத்தே கொண்டதெனச் சங்கநூற் கள் கூறுகின்றன. ஒல்லையூர் நாட்டைப் பற்றிப் புற நானூறு கூறுகிறது.

பல நாடுகள் அல்லது கூற்றங்களைத் தன் னகத்தே கொண்டது வளநாடு. பெயர் கொடுத்த முறையில் நாடுகளுக்கும் வளநாடுகளுக்கும் சிறிது வேறுபாடு இருந்து வந்தது. நாடுகளும் கூற்றங் களும் ஊர்களை அடிப் படையாகக் கொண்டே பெயர் கொடுக்கப்பட்டு வந்தன. ஆனால், வளநாடுகளெல் லாம் பாண்டிய மன்னர்களுடைய இயற்பெயர்களை யும் சிறப்புப் பெயர்களையும் அடிப்படையாகக் கொண்டு பெயர் பெற்றன. சோழர்களும் இம் முறைப்படியே பெயர்கொடுத்து வந்ததை முன்பே கண்டோம். பாண்டி நாட்டில் வளநாட்டைக் குறிப் பிடாமல் நாட்டை மட்டும் குறிப்பிட்டு ஊரைக் குறிப் பிடுவது பெருவழக்காய் இருந்து வந்தது. ஆனால் சோழநாட்டில் இராசராசன் காலம் முதல் வளநாட்

டைக் குறிப்பிட்டு நாட்டைக் கூறிய பின்னரே ஊரைக் கூறி வந்தனர்.

கிராம சபை

முன்பு கூறிய சோழர்களுடைய ஆட்சியிலிருந்த சபைகளை அமைத்துக் கிராம ஆட்சியை நடத்தும் முறை அச்சோழர்களுக்கு முன்பு ஆண்ட பாண்டியர் களுடைய நாட்களிலேயே தமிழ் நாட்டில் வழக்கில் இருந்தது. பாண்டியர்களுடைய கல்வெட்டுக்கள் தேர்தல் முறையைப் பற்றிக் கூறவில்லையாயினும், கிராம சபைகளைப்பற்றியும், வாரியங்களைப்பற்றியும், அவைகளுடைய பணிகளைப் பற்றியும் கூறுகின்றன.

படை

யானை, குதிரை, தேர், காலாள் ஆகிய நான்கு விதப் படைகளும் பாண்டியர்களிடம் இருந்தன. பாண்டியர்களிடம் இருந்த படைகளிற் சிறப்பாகக் கூறத்தக்கது அவர்களுடைய குதிரைப் படையே யாகும். 'கொற்கை, தொண்டி முதலிய கடற்றுறைப் பட்டினங்களில் ஆண்டு தோறும் பதினாயிரம் குதிரை கள் வந்து இறங்கின' என்று வாசப் என்னும் ஆசிரி யன் எழுதியுள்ளான். குதிரைகள் கொண்டுவரும் வழியில் இறந்தாலும், அவைகளுக்குப் பாண்டிய அரசர்களே விலை கொடுத்து வந்தனர். 'மார்க்கோ போலோ' என்னும் ஆசிரியன், 'பாண்டியர்கள் தங் கள் பணத்திற் பெரும்பகுதியைக் குதிரை வாங்கு

வதிலேயே செலவு செய்தனர்' என்று எழுதுகிருன். "பாண்டியர்களுக்குக் குதிரைகளைச் சிறந்த முறையில் வளர்க்கத் தெரியாதாகையால், அக்குதிரைகள் பாண்டி நாடு வந்து சில நாட்களில் வலிமையிழந்து, பயனற்றுப் போகின்றன. இதனுல் ஒவ்வோர் ஆண்டும் பாண்டியர்கள் குதிரை வாங்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இம்முறையிலேயே பணத்தின் பெரும்பகுதியையும் குதிரை வாங்குவதில் செலவு செய்தனர்,'' என்று அவ்வாசிரியனே எழுதுகிருன். இதனுல், பாண்டியர்களிடத்துச் சிறந்த குதிரைப்படை இருந்த தெனவும், அதில் அவர்கள் அதிக கவனம் செலுத்தி வந்தனர் எனவும் அறிகிரும். வில், வாள் தாங்கிய காலாட்படையும் அவர்களிடம் சிறப்பாக இருந்தது. இப்படையினர் 'பெரும்படையோம்' என்று கையொப்பமிட்டுக் கோயில்களுக்கு நிவந்தங்கள் கொடுக்கின்றனர். மதுரையிலுள்ள அரண்மனை, கோட்டை முதலியவைகளை உரோமாபுரி நாட்டிலிருந்து வந்த வீரர்கள் காத்து வந்தனர் என்ற செய்தியைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

அரசியல் அதிகாரி

பாண்டியரது ஆட்சியில் பல துறைகளிலும் பல அதிகாரிகள் இருந்தனர். அமைச்சன் அரசனுக்கு அண்மையிலிருந்து அரசியலைக் கவனித்து வந்தான்.

படைகளைக் காத்துப் போர்களில் அவற்றை நடத்திச் செல்வான் படைத்தலைவன். உள் நாட்டின் தலைவர்களாக விளங்கி நாட்டைச் சுற்றிப் பார்த்துக் குடிகளின் நன்மையைக் கவனித்து வந்தவர் அரையர். ஊர்களை அளந்து கூறு செய்வார், 'நாடு வகை செய்வோர்'. அரசாங்க நிலவரியைக் கணக்கிற் பதித்து வந்தவர் 'வரியிலார்'. அரசனுடைய ஆணையை உணர்ந்து ஊர்ச் சபைகளுக்கும், பிற அதிகாரிகளுக்கும் அதனை எழுதி வந்தவர் 'திருமுக மெழுதுவோர்'. சோழ நாட்டில் இவர்களைத் 'திரு மந்திர ஓலை' என்றனர்.

பாண்டியவரசர்கள் தங்களுடைய அதிகாரிகளின் திறமையைப் பாராட்டிப் பல விதமான பட்டங்களைக் கொடுத்து வந்தனர். அத்தகைய பட்டங்கள் தென்னவன் தமிழவேள், காவிதி, பஞ்சவன் மாராயன், பாண்டிய மூவேந்த வேளான், செழியதரையன், பாண்டிய விழுப்பரையன், தென்னவதரையன், பாண்டிய பல்லவ தரையன், தொண்டைமான், குருகுலராயன், காலிங்கராயன் முதலியன. காவிதி முதலிய பட்டம் பெற்றவர்கள் பொன்னாலாகிய பூ, மோதிரம், இறையிலி நிலங்கள் முதலியவற்றைப் பெற்றனர்.

நாணயங்கள்

சங்க நாட்களில் வழங்கி வந்த பாண்டியர் நாணயங்களைப்பற்றி நமக்கு எதுவும் தெரிதற்கில்லை.

ஆனால், பிற்காலப் பாண்டியர் காலங்களில் வழக்கிலிருந்த நாணயங்களைப் பற்றிய குறிப்புக்கள் சில நமக்குக் கிடைத்திருக்கின்றன. இவர் நாணயங்கள் பொன்னாலும் செம்பினாலும் ஆனவை. பழைய பாண்டியர் நாணயம் சதுரமாக இருந்ததென்றும், அதன் ஒரு பக்கத்தில் யானையின் வடிவம் பொறிக்கப்பட்டிருந்ததென்றும் கூறுகின்றனர். பாண்டியர்களில் பலர் தங்களுடைய சிறப்புப் பெயர்களையே தம் காலத்து நாணயங்களுக்குக் கொடுத்து வந்ததாகத் தெரிகிறது. 'அவனிபசேகரன் கோளகை' என்பது சீமாறன் சீவல்லபன் காலத்து நாணயத்தின் பெயர். மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் 'சோனாடு கொண்டான்' என்ற நாணயம் வழக்கிலிருந்தது. முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் 'கோதண்டராமன்' 'எல்லையளந்தான்' என்ற நாணயங்கள் வழக்கில் இருந்தன. சடையவர்மன் வீரபாண்டியன் காலத்தில் 'வாளால் வழி திறந்தான் குளிகை' என்ற பணம் வழக்கில் இருந்தது. இப்பெயர்களெல்லாம் அவ்வவ்வரசர்களுக்குச் சிறப்புப் பெயர்களாக அமைந்தவை.

அந்நாளில் வழங்கிய பொற்காசு ஒரு கழஞ்சு எடையுள்ளது. இக்காசின் ஒரு பக்கத்தில் இரண்டு கயல்களின் வடிவைக் காணலாம். மற்றொரு பக்கத்தில் இக்காசை வெளியிட்ட வேந்தன் பெயரைக்

காணலாம். அக்காலத்தில் காணம், கழஞ்சு, காசு, பொன் என்பவை வழக்கில் இருந்தன.

நில அளவு

நாட்டின் பரப்பை அறிந்து கணக்கிடுதற்குப் பாண்டிமண்டலம் முழுதும் அளந்து கணக்கிட்டனர். இதனை அளந்த அதிகாரிகள் 'நாடு வகை செய்வோர்.' நிலம் அளந்த கோலின் பெயர் 'சுந்தரப்பாண்டியன் கோல்' என்பது. இது இருபத்து நான்கடி நீளமுடையது. வேறு பெயர்கொண்ட கோல்களும் அக்காலத்தில் வழக்கில் இருந்தன. நிலங்களைக் குழி, மா, வேலி என அளந்து கணக்கிட்டனர். நிலங்களின் எல்லைகளை அறிந்து கொள்வதற்கு அங்கே 'புள்ளடிக் கற்கள்' என்ற பெயர் கொண்ட கற்களை நட்டனர். சிவபெருமான் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்களின் எல்லையில் நடப்பட்ட கற்களில் திரிசூலமும், திருமால் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்களின் எல்லையில் நடப்பட்ட கற்களில் திருவாழியும் பொறித்திருந்தனர். அன்றியும், தானங் கொடுக்கப்பட்ட நிலங்களைச் சுற்றிக் கள்ளியை வேலியாக இட்டனர். இவ்வாறு எல்லை அறியப்பட்ட நிலங்களைத் தானமாகக் கொடுக்கும்பொழுது அரசன் நீர்வார்த்துக் கொடுத்தல் மரபு. மேலும், ஒரு யானையை அவிழ்த்து விட்டு, அவ்யானை சுற்றி வருகின்ற எல்லைக்குட்பட்ட நிலங்களைத்

தானமாகக் கொடுக்கும் வழக்கமும் அக்காலத்து இருந்தது.

அரசிறை முறையும், ஆவணக் களரியும், அளவைகளும் சோழர் ஆட்சி முறையிற் கூறியவை களே இப்பாண்டியர் காலத்திலும் இருந்தன.

வாணிகம்

மதுரை, கொற்கை போன்ற இடங்களில் உரோ மாபுரி நாணயங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இதனால், நாம் பாண்டி நாட்டில் பிறநாட்டார் வந்து வியாபாரம் செய்து வாழ்ந்தமையை அறிகிறோம். இதுவன்றியும், உள்நாட்டு வியாபாரமும் சிறப்புற்றி ருந்தது. அதற்குத் தகுந்த நல்ல பாதைகள் கட்டப் பட்டிருந்தன. பண்டங்களை வியாபாரிகள் கழுதை களிலும், வண்டிகளிலும் கொண்டு சென்றனர். இவர்களுக்குத் திருடர் முதலியவர்களால் துன்பம் நிகழாதவாறு பாதுகாக்க அங்கங்கே நிலப்படைகள் அமைத்திருந்தனர். வணிகர் கூட்டம் கூட்டமாகச் செல்வது வழக்கம். இக்கூட்டத்திற்கு ‘வணிகச் சாத்து’ என்று பெயர்.

கொற்கைத் துறைமுகத்திற் கிடைத்த பாண்டிய நாட்டு முத்துக்களும் சங்குகளும் உலகெங்கும் புகழ் பெற்றவை. இம்முத்துக்களைப்பற்றிச் சங்க நூற்கள் பன்முறை கூறுகின்றன. பிற நாட்டார் இம்முத்துக்

களை விரும்பி வாங்கிச் சென்றனர். இதனால் முத்துக் குளித்தலும், சங்கறுத்தலும் பாண்டி நாட்டிற் சிறந்த தொழில்களாகத் திகழ்ந்தன. இவற்றோடு, பஞ்சினாலும் மயிரினாலுஞ் சிறந்த ஆடைகளை நெய்தனர். இவற்றை எல்லாம் பிற நாடுகளுக்கு அனுப்பி, அங்கிருந்து குதிரைகளும், கண்ணாடிச் சாமான்களும், மருந்து வகைகளும் பெற்றனர்.

இவ்வாறு பாண்டியர் ஆட்சிசெய்து விளங்கினர்.

77789

MUDIMANNAR MOOVAR

BY

M. SHANMUGHAM, B.A. (HONS.)

THE NATIONAL PUBLISHING CO.,
6, KONDI CHETTY STREET, MADRAS-1

Copyright] 1951 [*As.* 14